உ
கணபதி துணை.

# வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| தொகுதி | பிங்கள௵ ஆவணி௴ | பகுதி |
| 9. | September 1917. | 8. |

## போல்பூர் பிரமசரிய ஆசிரமம்.

நமது பானுவின் முந்திய ஸஞ்சிகைகளில் குறித்துள்ள இந்த முறையான கல்விச்சாலைகட்கு உதாரணமாகக் கீழே ஒரு கலாசாலைமுறை எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது.

வேதாந்தகேஸரியில் மிஸ்டர் ஸ்ரீ சைலர் பின்வருமாறு எழுதுகிறார்:—

நமது பூர்விகக் கல்விமுறையைப் புதுப்பித்துக் கொண்டுவர வேண்டிய முயற்சிகள், நமது தேசத்தில் இப்போது ஒரு புதுமையாக நாம் காட்டப்புகவேண்டாம். ஹரித்வாரத்தில் உள்ள ரிஷிகுலமும், போல்பூரில் உள்ள பிரமசரிய ஆசிரமமும் நமக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றன. அவற்றுள் போல்பூர் ஆசிரமத்தைப்பற்றிப் பேசப்புகுவோம். சமீபித்த க்ரிஸ்ட்மஸ் விடுமுறை நாட்களில் நாம் நேரில்கண்டதை இங்கு எழுதுகிறோம். இம்முறையே இந்து மதத்தினைத்தாங்கும் தூணாக நிற்கின்றது.

இந்த ஆசிரமத்துக்கு இப்போது சொந்தக்காரர் உலகெங்கும் கீர்த்திவாய்ந்துள்ள ரவீந்திரநாத டாகூர் என்பவர். இந்தக்கலாசாலை சென்ற 17 வருஷங்களாக நிலைத்துள்ளதேனும், 1914 வருஷம் வரையில் பங்காள மாகாணத்தைத் தவிர்ந்த பிறநாடுகளில் அறியப்பெற்றதாக இருந்திருக்கவில்லை. நமது வங்காளக் கவியாகிய டாகூர் அவர்கள் உலகம் மெச்சும் நோபல் வெகுமானத்தைப்

பெற்றபிறகே, உலகெக்கும் தெரிவிக்கப்பட்டதாகி முயற்சியிலும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது.

பூர்விகர் ஆசாரமுறையில் ஒரு கலாசாலை ஆரம்பிக்கவேண்டுமென்றநினைவு நமது டாகூரின் பிதாவான மஹரிஷி தேவேந்திரநாத டாகூர் அவர்கட்கு வந்தது. அகன்ற ஆகாயம் பூமி இவற்றின் விரிந்து பரந்த இடங்களை ஆத்மாவுக்கு ஆத்ம சக்தியைத் தந்து ஜடமாகிய தேஹக்கட்டினுள்ள பற்றை ஒழித்துக் காட்டுவன வென்று நன்கு அநுபவமுறையில் உணர்ந்த மஹரிஷிபவர்களே இப்போது கலாசாலை இருக்கும் இடத்தைத் தெரிந்தெடுத்தவர்கள். அங்கே அவர் நிஷ்டையிருந்த இடம் இரண்டு ஏழிலைப் பாலைமரங்களின் கீழிருக்கிறது. அங்கு இப்போதும் அடையாளமாகப் பின்வரும் வாக்கியம் வங்காளிபாஷையில் எழுதப் பெற்றிருக்கிறது. "அவரே எனது உயிர்க்கு சுகம்தருபவராகவும், என் இருதயானந்தராகவும் என் ஆத்மசாந்திதராகவும் இருக்கிறார்."

ஒரு கற்பாங்கான பூமியில் ஒரு அகன்றவெளியில் சால விருக்ஷங்களால் நிறைந்துள்ள ஒரு உயர்ந்த இடத்தை ஊஹித்துக் கொள்ளுங்கள். அதுவே நமது பிரமசரிய ஆசிரமம். இது போல்பூரில் இருக்கிறது. ஈஸ்ட் இந்திய ரெயில்வேயின் மேல், கல்கத்தாவுக்கு 99 மைலில் உள்ளதும் பாத்வானுக்கு 33 மைலில் உள்ளதுமான போல்பூர் ஸ்டேஷனுக்குச் சுமார் இரண்டுமைல் தூரத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இந்த ஆசிரமத்து இருப்பிடம், பட்டண வாஸத்திலிருந்து விலகினதாகவும் அதனாலேயே சாந்தமும் இன்பமும் நிறைந்துள்ளதாகவும் இருக்கின்றது. ஒரு பகுதியில் பழகியுள்ள ஜீவனும் பிரகிருதியின் இயற்கை யம்சங்களும் இனியவுறவுடன் கலந்தாடும் தன்மை அங்கு நன்குவிளங்குகின்றது. அதனைச்சுற்றியுள்ள தோட்டம் நமது ரவீந்திர நாதரால் வைத்து வளர்க்கப் பெற்ற சாலமரங்களாலும் மாமரங்களாலும் குளிர்ந்து இன்பமளிக்கும் ஆநந்தகரமான நிழலைத் தந்து கொண்டிருக்கிறது. மாணவர் விளையாட்டிடம் பெரிதாகவும் வெளியாகவும் இருக்கிறது. நான்கு புறங்களிலிருந்தும் சுத்தவாயு அபரிதமாக வீசிக்கொண்டிருக்கிறது. தோட்டத்துள் பலவிடங்களில் சுத்தநீர்

சோலைகள் தோண்டப் பெற்றிருக்கின்றன. இதுவே மாணவர்கள் சுத்தமனதுடன் கல்விகற்றுக்கொள்ளத்தக்க இடம். இது நமது டாகூர் அவர்கட்கு அமைந்தது அதிர்ஷ்டவசத்தால்தான் என்பது உண்மையாகிறது.

" * * * * * மயிலூர்

கந்தனை யனையவர் கலைதெரி கழகம்

* * * * * *

நந்தன வனமலர் நறைவிரி புறவம்."

வருப்புகட்கெல்லாம் பாடங்கள் மரங்களின் நிழல்களிலேகற்பிக்கப்படுகின்றன. மரங்களின் கீழே பாய்களின்மேல் பிள்ளைகள் உட்கார்ந்து படிக்கிறார்கள். மழைகாலங்களில், மாணவர்கள் உபாத்தியாயர்களுடைய அறைகளில் கூடியிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் தங்களால் கூடியவரை மாணவர்கட்கு எவ்வழியாலும் உயிர் வாழ்க்கைக்கும் ஆத்ம முன்னேற்றத்துக்கும் வேண்டியனவற்றைப் போதித்து வருகிறார்கள். சுலபமாகவும் இயற்கையாகவும் உள்ள வழிகளால் ஆத்மபோதத்தை யூட்டுகிறார்கள். சித்திரம் ஸங்கீதம் இவற்றில் பிரியமும் வாஸனையும் உடையவர்க்கு அவையும் முறையே கற்பிக்கப் படுகின்றன.

ஸங்கீத ஸபைகளும் நாடகசபைகளும் ஏற்றமாகக் கொண்டாடப் படுகின்றன. ஸங்கீதமுறை மனதுக்கு இன்பத்தையும் பக்தியையும் தரக்கூடியதாகவே இருக்கின்றது. மாணவர்கள் மழைக் காலங்களிலும் ஸங்கீதத்தைப் பயில்கிறார்கள். திறந்தவெளியில் காலை யாரம்பத்திலும் மாலை யாரம்பத்திலுங் கால்மணிநேரம் மாணவர்கள் தோத்திரம் சொல்லுகிறார்கள்.

வருஷ மிரண்டு முறைதான் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்படுவார்கள். பெரும்பாலும் 11 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் மாணவராகச் சேர்க்கப் படுகிறார்களில்லை. அநேகமாக 8, 9 வயதே சேர்த்துக் கொள்ளத்தக்க காலம். ஒவ்வொரு மாணவனும் பிரவேசச் சம்பளம் ரூ20-ம் மாதச்சம்பளம் ரூ20-ம் கட்டிச் சேரவேண்டும். மாதச்சம்பளம் சாப்பாட்டுக்கும், வாடகைக்கும், கற்பிப்புக்

கும், வெளிச்சம் வண்ணான் அம்பட்டன் வைத்தியம் முதலியவற்றின் கூலிக்குமாகக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் காகிதம் முதலானவற்றுக்காக ரூ5 கொடுத்து வைத்திருக்கவேண்டும்; அதுசெலவான பின்னர் மறுபடியும் அப்படியே கொடுத்து வைத்திருக்கவேண்டும். எல்லாச்சம்பளங்களும் வங்காளமாதத்தின் முதல் வாரத்திலேயே கொடுக்கப் பெறவேண்டும்; இல்லையாயின் மூன்று வாரங்கள் தவணையாகக் கொடுக்கப்படும்; இதனினும் கடந்துசென்றால் ரூ2 கூட்டிக்கொடுக்க வேண்டிவருகின்றது.

மாணவர் கலாசாலையில் சேரும்போதே பின்வரும் ஸாமான்களை ஆயத்தப்படுத்திக் கொண்டுவர வேண்டும். அவை:— மெத்தை தலையணை கொசுகுவலை விரிப்பு கம்பளியாகிய படுக்கைச்சாமான்களும், உடைகளும் குளிர்காலத்துக்குவேண்டிய உடுப்புகளும், ஒரு பானபாத்திரம் இரண்டு கிண்ணங்கள் ஒருதாலமாகிய தட்டுமுட்டுச் சாமான்களும், புஸ்தகங்கள் தேசப்படங்கள் மைக்கூடு காகிதம் எழுதுகோலாகிய படிப்புச் சாமான்களும் ஆம்.

ஸம்ஸ்கிருதம் வங்காளி இங்கிலீஷ் கணிதம் சரித்திர பாடம் பூகோள சாஸ்திரம் ரஸாயன சாஸ்திரம் இயற்கைத் தத்துவம் ஸங்கிதம் இவைகள் கற்பிக்கப்படுகின்றன. போதனாமுறைக்குப் போதிய பாஷையாக வங்காளியையே கொண்டிருக்கிறார்களென்பது சொல்லத்தேவையில்லை. இந்தக் கலாசாலையிலிருந்தே மாணவர்கள் கல்கத்தா யுநிவர்ஸிடியின் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குச் செல்லலாகும். அதாவது வகுப்புகள் தாழ்ந்த முறையில் நடத்தப்படவில்லையென்பதை தெரிவிக்க வந்தது. பெரும்பாலும் மாணவர்கள் தங்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையான பிறகு ஆசிரமத்தை விட்டு விலகிக் கொள்ளுகிறார்கள், ஆனால் சிலர் இருந்து ஸம்ஸ்கிருதத்தை விருத்தி செய்து கொள்ளுகிறார்கள்.

கால்பந்து கிரிக்கட் முதலான சிறுவிளையாடல்களை மாணவர்கட்குத் தேஹாப்பியாஸ முறைகளாகும். சிலசமயங்களில் உபாத்தியாயர்களுடன் உலாப் போவதுமுண்டு. தோட்ட வேலைகள் தச்சுத் தொழில் முதலானவைகளும் ஒழிவு நேரங்களில் கற்பிக்கப்படுகின்

றன். பூந்தோட்டங்களும் மாணவர்களால் ஆக்ரிக்கப் படுகின்றன.

மாணவர்களது தினசரி மிகவும் கவனிக்கத் தகுந்தது. அதிகாலை 4 ½ மணிக்கு நித்திரை நீங்கி எழுந்திருக்கிறார்கள். தங்கள் தங்கள் இடங்களைச் சுத்தம் செய்து கொண்ட பிறகே காலைக்கடன் கழிக்கச் செல்கிறார்கள். பிறகு ஆசிரமத்து வேலைக்காரர்களால் கிணற்றிலிருந்து இறைக்கப் பட்டு நிரப்பப் பெற்றுள்ள தொட்டித் தண்ணீரில் ஸ்நானம் செய்கிறார்கள். சிறிது காலம் திறந்த வெளியில நிஷ்டையும், தோத்திரங்களும் செய்கிறார்கள். பிறகு காலை 7 மணிக்குக் காலை யாகாரம் செய்து கொண்டு 10½ மணிவரையில் காலைப்பாடங்களைப்படிக்கிறார்கள். பிறகு 11 மணியில் மத்தியான ஆகாரம் கொடுக்கப் படுகிறது. மச்சமாமிசங்கள் ஆசிரமத்தில் சேர்க்கப படவில்லை. பொதுவான சாப்பாட்டறையில்தான் எல்லோரும் கூடியிருந்து சாப்பிடுகிறார்கள். ஜாதிவித்தியாச நோக்குடைய பெற்றோர்கள் விரும்பினால், தனியே இருத்தியமுது படைக்கப்படும். ஆனால் வந்துசேரும்போது பொதுச்சாப்பாட்டறையில் சேர்ந்துள்ள மாணவன், பிறகு தனியறைக்கு அனுப்பப்படுவதில்லை. யார்க்கும் ஒரேமாதிரி யாகாரந்தான். ஆனால், அசௌக்கிய காலங்களில் வைத்தியருடைய கட்டளையின் பேரில் தனிச்சாப்பாடு தரப்படும். சமையற்காரர்கள் பிராமணர்களேதாம். காலையும் மாலையும் மாணவர் கட்கென்றே மிகுதியாகப் பாலவார்க்கப் படுகிறது.

சென்ற வருஷம் கலாசாலையில் 140 மாணவர்கட்கு அதிகமாக இருந்தார்கள். உபாத்தியாயர்கள் 18 பேர். ஐரோப்பியர்களான ரெவரண்ட் ஆண்ட்ரூஸனும், பியர்ஸனும் அவர்களுள் சேர்ந்தவர்களே யாவார். அமெரிக்கா யூனிவர்ஸிடியில் பி. ஏ. பரீக்ஷையில் தேறியுள்ள பாபு ஸந்தோஷ சந்த்ர மூஸும்தார் என்பவர் அந்த ஆசிரமத்தில் வைத்திருக்கும் ஆதரவு எழுதிமுடியாததொன்றாகும். பாபு ஜகதானந்தராய் என்பவரும் குறிப்பிடத் தகுந்தவர். இவர் ரஸாயன சாஸ்திர போதகர். இவர் கலாசாலையாரம்பத்திலிருந்தே இங்கு உழைத்து வருகிறார். அவரிடம் சிறிது நேரம் உட்கார்ந்து கலாசாலையைப்பற்றி ஸம்பாஷித்தோமானால், அவர் கலாசாலையின் சிறப்பு வளர்ப்பைச் சொல்லிச் சொல்லி யானந்தவாரிதியில் மூழ்கியெழுந்

திருப்பார். இவர் சில ரஸாயன சாஸ்திர நூல்களை எழுதியிருக்கிறார். வங்காளிபாஷையில் எழுதப்பெற்றுள்ள அந்நூல்களால் இவரது பெயர் ஆசிரமத்துக்கு வெளியிலும் உலாவருகிறது. கலாசாலைத் தலைமை யுபாத்தியாயராகிய ரேபால் சந்திரராய் அவர்கள் சரித்திர பாடம் போதிக்கிறார்கள். ஐரோப்பியர் இங்கிலீஷ்ப் பாடங்கள் போதிக்கிறார்கள். பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த மஹாராஷ்டிரப் பிராமணரான மிஸ்டர் பீமராவ் என்பவர் கர்நாடக சங்கீதம் கற்பிக்கிறார். பாபு தேவேந்திரநாத டாகூர் என்பவரால் இந்துஸ்தானி சங்கீதம் கற்பிக்கப்படுகிறது. (இவர் மகரிஷி தேவேந்திரநாதரல்ல) ஒரு மதராஸியாகிய மிஸ்டர் சுப்பராவ் என்பவர் அங்கு உபாத்தியாயராக இருந்தார்; ஆனால் சீதோஷ்ண நிலையின் தாங்க முடியாத தன்மையால் விலகியிருக்கும்படியாயிற்று.

ஆசிரமம் ஒருசிறு கிராமம் போலவே இருக்கிறது. சில உபாத்தியாயர்கள் தங்கள் குடும்பத்துடன் வசிக்கிறார்கள். இவர்கட்கும் கலாசாலைப்போசனம் இனமாகவே அளிக்கப்படுகிறது. வேலைக்காரர்கள் இருபது பேர்கள் இருக்கிறார்கள். வெளிப்புற வீடுகளில் தனிமையாக வசிக்கிறார்கள். நமது டாகூர் குடும்பத்தாரிற் சிலரும் இங்கேயே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ரவீந்திரநாத டாகூரும் அவரது சிஷ்யர்களும் வசித்து வருகிற சாந்திநிகேதனம் தவிர மற்றைக்கட்டிடங்களெல்லாம் கூரைவீடுகள்தாம். அதுமாத்திரம் தளவரிசை செய்யப்பெற்றதும் மேல்மாடியுள்ளதுமாக இருக்கிறது. கட்டிடச் சாமான்களெல்லாம் பிராசீனமுறையை நன்கு தெரிவிக்கக்கூடியனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கொக்கி தாழ்ப்பாள் முதலானவைகளெல்லாம் மரங்களாலேயே யாக்கப்பெற்றிருக்கின்றன. பன்னிச் சொல்வதில் பயனில்லை. உயிர்வாழ்க்கையில் அதிகச் செலவைத் தருவனவும் அவசியமில்லாதனவும் டம்பத்துக்கானவுமான ஸாமான்கள் அங்கு விலக்கப்பட்டிருக்கின்றன. சுருங்கிய செலவில் செய்யப் பெற்றனவேனும் அழகாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. விருந்தினர்க்கென்று ஒரு வீடும் அமைக்கப்பட்டிருக்கிறது. சிற்சில ஸமயங்களில் சிலர் ஆசிரமத்தைப் பார்த்துப் போகவும் வருவதுண்டு. அவர்கட்கு வேண்டிய சவுகரியங்கள் அங்குச் செய்தளிக்கப் படுகின்

றன். ஆனால் அவை வடதேச முறைப்படி யிருக்கும்.

மாணவர்கள் மூன்று வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரிவு வயதை அநுசரித்தபடியாக இருக்கும். பள்ளிக்கூட மாணவர்கட்கே ஒருவன் தலைவனாக இருப்பான். ஒவ்வொரு வகுப்பினரும் தத்தமக்கென்று ஒவ்வொரு மாணவச் சிறுதலைவனைப் பெற்றிருப்பார். அந்தமாணவச் சிறுதலைவர்க்கும் துணைத்தலைவர்கள் உண்டு. அறுவர் அல்லது எழுவர்க்கு ஒரு துணைத்தலைவனுண்டு. மாணவரும் அத்தலைவர்க் கடங்கிக் கீழ்ப்படிதலுள்ளவராக இருப்பார்கள். சிறுசச்சரவுகளையும் கீழ்ப்படியாமையையும் மாணவத்தலைவர்களே விசாரித்துத் தீர்த்து விடுவார்கள். குற்றத்துக்குத் தண்டனை சிறிதேனும் உறுதியுள்ளதாக விருக்கும். குற்றம்செய்தோர் சிறிது காலங்கட்கு விளையாட்டில் சேர்க்கப்படாமலாவது மற்ற மாணவர்களுடன் பேசக்கூடாமலாவது ஒதுக்கிவைக்கப்படுவார்கள். எல்லா மாணவர்கட்கும் முன்னிலையில் தன் குற்றங்களை யொப்புக்கொண்டால் மன்னிக்கப் படுவதுண்டு. உபாத்தியாயர்கள் பிரம்பு என்பதனையே கண்ணால் பார்த்திருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறோம். அன்றியும் எவ்விதமான குரூரதண்டனையும் அங்கு இல்லை.

மாணவர்கள் மூன்று வங்காளிப் பத்திரிகைகளையும் ஒரு இங்கிலீஷ்ப் பத்திரிகையையும் நடத்திவருகிறார்கள். அநேகமாக அவைகள் பிழைகள் இல்லாமலே வெளியாகின்றன. எழுதப்பெற்ற வியாஸங்கள் கலாசாலை யங்கத்தினரால் பார்க்கப்பட்ட பின்னரே அச்சிடப்பெறுகின்றன. ஆசிரம புஸ்தகசாலை ஸம்ஸ்க்ருதம் வங்காளி இங்கிலீஷ்பாஷைப் புஸ்தகங்களாலேயே நிரம்பியிருக்கிறது. யாத்திரையையும் வீரத்தையும் பற்றிய புஸ்தகங்களையே மாணவர்கள் மிகுதியும் விரும்புகிறார்கள். பாபு நளினிகாந்த ராய் என்பவரே புஸ்தகசாலைக்கு அதிபராக நியமிக்கப் பட்டிருக்கிறார். அவரே எமக்கு இந்த வியாஸத்தை எழுதுவதற்கு வேண்டிய ஸாதனங்கள் தந்தவராவர்.

இந்த ஆசிரமம் கவர்ன்மெண்டாரது அங்கீகாரத்தைப் பெறவில்லையாதலால், அவர்களது உதவியை எதிர்பாராமலே நடத்தப் பெறுகிறது. கலாசாலைச் செலவுக்குத் தேவையான வருவாய்கள்

நான்கு வகைப்பட்டிருக்கின்றன. அவை:— 1. சாந்திநிகேதன மூலதனத்தின் வட்டிவரும்படிகள். இதுவே முக்கியாதாரமாக இருக்கிறது. 2. டாக்டர் ஸர் ரவீந்திரநாத டாகூர் அவர்கள் எழுதியுள்ள புஸ்தகங்களின் விற்பனவுகள். இது அடுத்த ஆதாரமாகச் சொல்லப்படும். 3. மாணவர்களின் சம்பளங்கள். 4. டாகூர் அவர்களது நோபல் வெகுமதியின் வட்டி. இவைகளெல்லாம்கூடி ஆசிரமச்செலவுக்குப் போதாதிருப்பின் டாகூர் அவர்கள் கவனித்துக் கொள்ளுகிறார்கள்.

மாணவர்கள் பெரும்பாலும் எல்லாக்காலங்களிலும் உபாத்தியாயருடன் கூடிக்கொண்டேயிருப்பார்கள். மாணவர்களின் படுக்கையறைகளைப்பற்றிக் கவனிக்கும்படி உபாத்தியர்களை நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் மாணவர்களும் அருளும் அன்பும் கூடினவர்களாக இருப்பதனால், அந்தக்கூட்டுறவு சுககரமாகவும் ஆனந்தகரமாகவும் இருக்கிறது. மாணவர்களும் தங்கள் வீட்டு வாசத்தைவிட இதனையே விரும்புகிறார்கள். சிற்சில காலங்களில் வயது கூடியமாணவர்கள் வெளிச்சென்று அயல் கிராமங்கட்குள் நுழைந்து அங்குள்ளவாஸிகட்குத் தேசாபிமானத்தைப் போதித்து வருவதுமுண்டு. மாணவர்கட்குப் பரோபகார குணமும் தேசாபிமானமும் சிறுபோதிலிருந்தே போதிக்கப் படுகின்றன.

பாபு ஸந்தோஷ முஜும்தாரது மேற்பார்வையில் ஒரு தினசரிக்குறிப்புப்புஸ்தகமும் ஆசிரமத்தில் இருக்கிறது, சுத்தமான பால் கொண்டுவந்து கொடுக்கப்படுகிறது. அதிகம் வேண்டுமானாலும் தருவிக்கப் படுகின்றது. ஆசிரமத்து உபயோகத்துக்காகவே மிஸ். B. P. டட் என்பவரால் ஒருவைத்தியசாலையும் நடத்தப்பட்டு வருகிறது. சுரம் சீதபேதி பேதி இவைகள் சிலசமயங்களில்இருப்பதுண்டு. ஆனால் தினசரிக் குறிப்பில் (வைத்தியம்) நால்வர் அல்லது ஐவர்தாம் குறிக்கப்படுகிறார்கள். அதனாலேயே ஆச்சிரமம் சௌக்கிய நிலையில் இருக்கிறதென்பது ஊகிக்கப்படலாகும்.

ஆசிரமத்தை யொட்டி ஒருதந்தித் தபாலாபீஸும் இருப்பது மாணவர்கட்கு மிகவும் ஆதரவாக இருக்கிறது. பத்திராதிபர்.

---

# கீழ்நாட்டு நாகரிகமும்
## மேல்நாட்டு நாகரிகமும்.

நாகரிகமென்பது, மக்கள் முன்னேற்றத்தை யடைந்துவரக் காரணமான உலகக் கட்டுறவில் நிகழும் பலதிறப்பட்ட பக்குவ நிலையேயாகும். இதனை இன்னும் விவரமாகச் சொல்லப் புகுந்தோமாயின், ஒருதேசத்தாரோ அல்லது ஒருகூட்டத்தாரோ கால தேச வர்த்தமானங்கட்கு ஏற்றபடியாக விருத்தியடைந்துவரும் போது, அவர்களில் உயர்ந்தவர்கள் நடந்துகாட்டிய தேஹயாத்திரையின் வழிகளும் ஆத்மயாத்திரையின் வழிகளுமே யென்பது பொருந்தும். ஆயின், ஒரே தேசத்தாருக்குள் பக்குவமடையாத ஜீவர்களுக்குந் தாழ்ந்த விஷயங்களில் ப்ரவ்ருத்தியுண்டாகிச் சில சமயங்களில் அவர்களே ஜனத்தலைமைபூண்டு சில ஒழுக்கங்களைக் காட்டியிருக்கலாமாயினும், அவை அத்தேசத்து ஸமூதாய ஜனங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய எடுத்துக்காட்டுகள் ஆகமாட்டா; ஆனால் அவர்களுள்ளும் கற்றறிந்தடங்கிய பெரியோர்களது இருவகை யொழுக்கநிலைகளே நாகரிக நிலைகளெனக் கருதப்படுகின்றன. இருவகை யொழுக்கமாவன:—தேஹ ஒழுக்கமும் ஆத்ம ஒழுக்கமும் ஆம். ஆகையால், இங்கு எடுத்துக்கூறப்படுவன, அவ்வத் தேசத்துப் பெரியோர்களால் அங்கீகரிக்கப்பெற்றுப் பொதுஜனங்களால் ஒழுகப்பெற்றுவந்துள்ள நிலைகளே தாம் என்று எண்ண வேண்டும். ஆயினும், நாம் இவண் எடுத்துக்கொண்டது கீழ் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் நாகரிகத்தில் உண்டாயிருக்கும் வித்யாஸமேயாகும்.

கீழ்நாடாவன:—ஆசியாக்கண்டமும் நாம்வசிக்கும் பூமியாகிய இந்திய தேசமும்; மேல்நாடாவன:—ஐரோப்பியக் கண்டமும் அமெரிக்காக் கண்டமும் ஆகும். இவற்றுக்குள் வித்யாஸம் கூறப் புகுந்ததாலேயே கீழ்நாட்டு ஒழுக்கங்கள் மேல்நாடுகளில் இல்லை யென்றாவது மேல்நாட்டு ஒழுக்கங்கள் கீழ்நாட்டில் இல்லையென்றாவது நாம் எண்ணுவதற்கு இயலாது. சில மாறுபட்டிருக்கலாமாயினும், அவை பெரும்பாலும் தேசத்தின் சீதோஷ்ண வேறுபாட்டால் உண்டாயிருக்கலாம் என்றே கருதவேண்டும்.

கீழ்நாட்டில் ஆத்ம முன்னேற்றத்தின் உறுதி நிலையாவது கடவுளருளைப் பெற்றுக் கடவுள் தன்மையை யடைந்து நிற்றலேயாகும். அந்த நிலையை யடைந்தவர்கள் ஞானி யென்றும் ரிஷி யென்றும் தீர்க்கதரிசியென்றும் ஏற்றவாறு அழைக்கப்படுகிறார்கள். நமது ஆசியாதேசச் சரித்திரமானது இத்தகைய பெரியோர்களைப் பெருதிருந்தகாலமேயில்லை யென்பதை வற்புறுத்திக்காட்டும். இத்தகைய பெரியோர்களையே மக்களுள் உயர் பதவியடைந்த மஹான்களென்பார் கீழ்நாட்டார். மேல்நாட்டார் இத்தகையோரை மானுடத் தன்மையின் முடிவு பெற்ற உத்தம மனிதர் என்றே கொள்வர். இவர்கள் சாஸ்திரிகளாகவும் இருக்கலாம். சித்திரிக்கர்களாகவும் ராஜாங்க நிபுணராகவும் இருக்கலாம். ஞானிகளையும் ரிஷிகளையும் பார்க்கிலும் மேற்சொல்லப்பட்ட அத்தகைய மனிதர்களையே மேல்நாட்டார் மிகவும் விரும்பிப்போற்றுவார். இது ஒவ்வொரு மேல்நாட்டாரும் கொண்டுள்ளகருத்தென்ப.

மதவிசாரம் தத்துவவிசாரம் ஆத்மவிசாரம் இவையே கலைகளுக்கும் சித்திரவித்தைக்கும் உயிர்வாழ்க்கைக்கும் மேலானவையென்பார் கீழ்நாட்டார். இக்கொள்கையே இலக்கியங்களிலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஆசியர் சாஸ்திரவாராய்ச்சிகளையும் சித்திரவித்தையையும் நல்வாழ்வு வாழ்வதையும் மறுக்கின்றாரென்றாவது, ஐரோப்பியர் ஆத்மாஹஸ்ய சாஸ்திரங்களையே கவனிக்கிறதில்லை யென்றாவது எண்ணிவிட முடியாது. ஆசிய இலக்கியங்களெல்லாம் பிரவ்ருத்தியை யொழித்து நிவ்ருத்தியிற் புகுந்த ஆத்மாக்களுக்கே பெருமைகொடுத்துப் பேசுகின்றன. ஐரோப்பிய இலக்கியங்களோ வீரர்க்கும் அவர்களது சௌர்யத்திற்கும் அவர்கள் மற்றவர்களை யடக்கியாண்ட திறமைக்குமே கௌரவமளித்துப் பேசுகின்றன.

ஸ்வகீயமான சுகத்தையொழித்துப் பாரமார்த்திக நிலையைக் கோருவதே உறுதியென்று ஆசியர் கூறுவர். ஸ்வகீய சுகமே மனிதனுடைய முடிவு என்று ஐரோப்பியர் கொள்வர். மனுஷ்யாவத்துக்கு மிஞ்சிய செயலைப்பெறுவதே முடிவான நிலையென்று கீழ்

நாட்டாரும், கடவுள் அருளால் மனுஷரூபத்தை மாற்றிக்கொள்வதே முடிவான நிலையென்று மேல்நாட்டாரும் பிடிவாதமாகக் கூறுவர்; ஆசையை யொழித்துவிடுவதே உயர்வான ஆசாரமென்று கீழ்நாட்டாரும், அவ்வாசைகள் வேறாகமாறுதலே அபிவிருத்தியென்று மேல்நாட்டாரும் கொள்வர். மனோசக்தியைத் தடைப்படுத்துவதே காரியமென்று கீழ்நாட்டவரும், அவற்றையுயர்ந்த பதவிக்கு விருத்தி பண்ணுவதே காரியமென்று மேல்நாட்டாரும் சொல்லுகின்றனர். சாந்தம் தெளிவு பரோபகாரம் இவற்றையே ஆசியர் உபதேசிக்கிறார்கள். ஐரோப்பியரோ ஏகாக்ரம் ஏகத்யானம் கவனம் இவற்றையே உத்ஸாகப்படுத்தி வருகிறார்கள். தேஹத்தின் புத்திபலத்தையும் நரம்பின் பலத்தையும் தாழ்த்தவேண்டுமென்று ஆசியரும், அவற்றை உயர்த்தவேண்டுமென்று ஐரோப்பியரும் கூறுகிறார்கள். ஞானியும் பக்தனும் துறவு நிலையையும் யோகியும் கர்மியும் புத்தி பலத்தையும் விருத்திசெய்ய வேண்டுமென்றும் கருதுகின்றனர்.

கீழ்நாட்டாருக்கு நிர்விஷயமாய் ஆத்மா முன்னேறுவதென்பது ஆத்மபரித்யாகமாகும். மேல்நாட்டாருக்கோ நன்மையேயாகும். முன்னவர்க்கோ மனிதரது உயர்தரமான ஸாத்யங்களில் உத்ஸாகத்தைக் காட்டி வெற்றியடைவதாகும். பின்னவர்க்கோ அதிசயமானவற்றிலேயே உத்ஸாஹத்தைக்காட்டி, அதனால் உலக வாழ்க்கையின் தினசரி அநுபவநிலையில் முன்னேற்றங்கொண்டு நிற்பதாகும். முன்னவரது அபிப்பிராயமானது இதரர்களுடைய சுகதுக்கங்களில் அநுதாபங்காட்டுதலாகும். பின்னவரது அபிப்பிராயமோ ஸ்வகாரியஸித்தியில் ஸாமர்த்தியம் காட்டுதலாகும். முன்னவரோ தன்மறுப்பினாலும் பொறுமையாலும் தமக்குற்ற இடரைநீக்கிக்கொள்வர். பின்னவரோ தமது ஆதிக்யத்தாலேயே தமது இடரினைக் கடந்துசெல்வர். முன்னவர்க்கு உலகப்பொதுவான வாழ்க்கையில் உயர்தரமான கதியையே விருத்திசெய்வதில் ஆசையும் அதற்கு அநுகுணமாக மனிதரிடத்தும் இதர ஜீவரிடத்தும் உண்மையான பொதுநோக்குடையவராயிருப்பதில் ஆசையும், பின்னவர்க்குச் சுயநன்மையிலும் அதனையநுசரித்ததானபடி ஜீவரிடத்தில் கருணை

யுடைமையில் ஆசையும் பெருகிநிற்கும். முன்னவர்க்கு யாவரிடமும் உறவாடும் நிலைமையில் நினைவும், பின்னவர்க்குச் சுயநன்மையிலும் தனது சரித்திரத்தைப் பெருமைப்படுத்திக் காட்டிக்கொள்ளுதலிலுமே நினைவும் பிரதான பாகங்களாக நிற்கின்றன. ஆகையினாலேயே கீழ்நாட்டாரினது உள்ளத்தின் நினைவைப்பற்றியும் மேல்நாட்டாரினது செய்கையைப் பற்றியும் சரித்திரங்களில் அடிக்கடி கவனிக்கும்படியாகிறது.

கீழ்நாட்டார் பெருமை கருணை சீலம் இவற்றைச் சம்பாதிக்க முயல்கிறார்கள். மேல்நாட்டார் உக்கிரம் தனிமை தேஹசுத்தம் இவற்றையே பெற முயல்கிறார்கள். கீழ்நாட்டாரின் சாஸ்திரங்களும் இலக்கியங்களும் சூசகங்களாகவும், மேல்நாட்டாரின் சாஸ்திரங்களும் இலக்கியங்களும் வெளிப்படையாகவும் விளக்கமாகவும் இருக்கின்றன. கீழ்நாட்டார் அநுமானகாரியங்களையும் யதார்த்தங்களாகவும் மேல்நாட்டார் யதார்த்த காரியங்களையும் அஸாத்யமாகவும் காட்டமுயல்கிறார்கள். கீழ்நாட்டாருக்குக் கபடமின்மையும் ஆத்மசுத்தமும் முக்யமான இயற்கைக் குணங்களாகவும், மேல்நாட்டாருக்கு விசேஷபோகம் தேஹசுத்தம் ஆரோக்யம் என்னும் இவையே இயற்கைக் குணங்களாகவும் இருக்கின்றன.

கீழ்நாட்டு நிபந்தனையெல்லாம் இணங்குந்தன்மையுடையனவாகவும் உறுதியுடையனவாகவும் இருக்கின்றன. அதனால் அவை சமபாவங்களிலும உயிர்வாழ்க்கைக் குபர்வான கருத்துக்களிலும் வேறுன்றி யிருக்கின்றன. மேல்நாட்டுநிபந்தனையோ இணக்கங்கொடாதனவாகவும் மாறுபடக் கூடியனவாகவும் இருக்கின்றன. கீழ்நாட்டான் இதராது கொள்கைகளையும் கிரமமாகத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் தன்மையினால் வெற்றியடைகிறான். மேல்நாட்டானோ தன்னைச் சூழ்ந்துள்ளாரிடத்திற பலமான பற்றுடைமையினால் வெற்றி மார்க்கத்தில் நுழைகிறான். இதனாலேயே மேல்நாட்டார் கீழ்நாட்டாரை ஆளும் நிறமையில் உறுதிகொண்டிருக்கிறார்கள்.

படிப்பிலும் கீழ்நாட்டாருக்கும் மேல்நாட்டாருக்கும் சில வித்யாஸங்கள் காணக்கிடைக்கலாகும். கீழைநாட்டில் உபாத்தியாயர்க்கும் மாணவர்க்கும் பரஸ்பரம் ப்ரீதியும் நேர்த்தியான கட்டுறவும் காணப்படுகின்றன. அவற்றால் மரியாதையும் வணக்கமும் காணப்படுகின்றன. இம்மாதிரிப் பழக்கத்தாலே அநுதாபசித்தம் விருத்தியாக்கப் படுகின்றது. மேல்நாட்டு உபாத்தியாயரிடத்தும் மாணவரிடத்தும் கண்டிப்பும் ஒழுங்குமே காணப்படுகின்றன. குணதோஷ விசாரணைக்குரிய ஊஹபுத்தியே எல்லாவற்றிலும் உபயோகிக்கப் படுகின்றது. கீழ்நாட்டு உபாத்தியாயர் ஸாதாரணமாக எல்லாவற்றிற்கும் ஸமாதான சித்தத்தையே கொள்கிறார். மேல்நாட்டு உபாத்தியாயர் விவாதத்துடனே தர்க்கிக்கிறார். இயற்கையறிவை எவ்வளவு தூரம் விருத்திசெய்யக்கூடுமோ அவ்வளவு தூரம் கீழ்நாட்டான் விருத்திசெய்து கொள்ளப் பிரயத்தனப்படுகிறான். முன்னவன் தனது ஆத்மா பக்குவமடைவதற்குக் காத்திருந்து உயிர் வாழ்க்கையிற் சில த்யாகங்களையும் செய்கிறான். பின்னவன் உயிர் வாழ்க்கையிலேயே தனது ஆத்மாவையும் நுழைத்து உழல்கின்றான். முன்னவன் தான் கருதும் பொருள்களினுற்ற பிரதானமான தத்துவங்களையுணர்கிறான். ஆனால் அவ்வொன்றினது தனித்த தெய்விகமான மாறுபாடுகளைக் குறித்துக் கொள்வதில் தோற்றுப் போகிறான். பின்னவன் பொருள்களின் முக்யாதாரமான காரணங்களைக் குறித்துக்கொண்டு அவற்றின் தனிமையின் தெய்விகமுமான குணங்களை விவரிக்கிறான்.

கீழ்நாட்டாரின் ஆத்ம தர்மமானது த்யானத்தையும் உபாஸனையையுமே பற்றியிருக்கிறது. மேல்நாட்டாரின் ஆத்ம தர்மமோ ஏகாக்ரதையிலும் ஸ்வதாத்பர்யத்திலுமே நிலைத்திருக்கிறது. முன்னவர் சலனமற்ற தன்மையைப் பழகுகிறார். பின்னவர் ஆண்மையை மாத்திரம் பழக்குகிறார். முன்னவர் உபதேசத்தாலேயே கற்றுக் கொள்கிறார், பின்னவர் தமது தீர்மானத்தினாலேயே கற்றுக் கொள்கிறார். முன்னவர் தமது உறுதியைக் கைக்கொண்டு அதனை யநுபவத்திற் கொண்டுவர முயல்கிறார்; பின்னவர் தாம் பற்றியுள்ளதையே யுறுதியாகக் கொள்கிறார். முன்னவர் உலகத்துக்குச்

சாட்சியாக இருக்கிறார். பின்னவர் கட்டனாக இருக்கிறார். ஒவ்வொன்றும் நல்ல பயன் தருவதே. எந்தத் தத்துவசாஸ்திரியும், "எது உயர்ந்தது?" "எது தாழ்ந்தது?" என்று கணிப்பதற்குப்புகார் என்று எண்ணுகிறோம். ஏனெனில், சிநேகாஷ்ணங்கட்கு ஏற்பக் குணங்கள் அமைகின்றனவாகலின் என்க. கடவுளால் ஏற்படுத்தப் பெற்ற நியதியைத் துணைப்பற்றியே ஒவ்வொரு ஆத்மாவும் முன்னேற்றமடையத் தொடங்கி யிருக்கிறது. அவரது கோட்பாட்டையும் சட்டத்தையும் முற்றும்உணர்ந்தவர் அன்றோ இவற்றுக்கு ஒரு குறைகூறவேண்டும். அத்தகையர் இல்லையென்றே சொல்லலாகும்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

# மகன்றந்தைக்காற்றுமுதவி.

இவ்வாக்கியம், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால் அருளிச்செய்யப்பட்ட திருக்குறளிற் புதல்வர்ப்பேறு என்னும் அதிகாரத்தின்கண் உள்ளதாகும். இதற்குப் பரிமேலழகியார் "கல்வியுடையனுக்கிய தந்தைக்கு மகன்செய்யுங்கைம்மாறுவது" என்று உரை யெழுதியுள்ளார். கைம்மாறு என்பதற்குப் பிரதியுபகாரம் என்பது பொருள். இப்பொழுது யான் இவ்வியாசம் எழுதத்துணிந்ததன் நோக்கம், "கல்வியுடையனுக்கிய" எனஎதற்காக வருவித்துச் சேர்த்துக்கொண்டிருக்கலாம். பிரதியுபகாரம் என்ற பொருள்தரக்கூடிய கைம்மாறென்னுஞ் சொல்லை உதவியென்னும் பதத்திற்கு உரையாக எதைநோக்கி எழுதியிருக்கலாம் என்பனவற்றை முக்கியமாகக் கொண்டு அவற்றினின்றும் சிலவிஷயங்களை யெழுதலா மென்பதே.

உதவியென்னும் பதத்திற்குப் பிரதியுபகாரம் என்றுபொருள் தரக்கூடிய கைம்மாறு என்பதை உரையாக எழுதியுள்ளமையால் முன்பே பிதாவானவர் புத்திரனுக்கு யாதேனும் ஓர்உபகாரத்தைச் செய்திருத்தல்வேண்டுமென்றும், அதற்குப் பிரதியாகப் புத்திரன்

செய்யும் உபகாரமென்றும், பொருள் தோன்றலாம். இனி, பிதா புத்திரனுக்குச் செய்த உபகாரம் யாதாயிருக்கலாம் என்பதையும், அதற்குப் பிரதியாகப் புத்திரன்செய்யவேண்டிய உபகாரம் யாது என்பதையும் நாம் யோசிக்கவேண்டும். "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தியிருப்பச் செயல்" என்று நம்திருவள்ளுவநாயனார் தந்துள்ள ஆணையை மேற்கொண்ட உத்தமத் தந்தைமார் தங்களுடைய புத்திரர்களைப் படித்தோர்களது சபையினிடத்திலே அவரினும் மேம்பட்டிருக்குமாறு கல்வி கற்பித்தே யிருப்பர். இத் துணிவுகொண்டே புத்திரன்பொருட்டுக்கட்டளையிட்டுக் கூறியதும் இப்பொழுது எடுத்துக்கொண்ட வியாசத்தின் பெயருமாகிய "மகன்றந்தைக் காற்றுமுதவி" என்ற குறளடிக்கு நம் பரிமேலழகியார் "கல்வியுடையனுக்கிய தந்தைக்கு மகன்செய்யுங் கைம்மாறாவது" என்று உரைவரைந்துள்ளார். நிறைந்தசெல்வமுடையவனுக்குதல் முதலிய வேறுநலன்களைச்செய்திருத்தல் கூடாதா? கல்வியுடையனாகத்தான் ஆக்கியிருத்தல்வேண்டுமா? என்று ஆட்சேபம் நிகழலாம். அச்செல்வமுதலியனவெல்லாம் துன்பத்தைத் தரத்தக்கனவாதலாலும் கல்வியே எப்பொழுதும் இன்பத்தைத்தரத்தக்கதாதலாலும் கல்வியுடையனுக்குதலையே பெரியோர்கள் பெரிதெனக் கருதியுள்ளார்கள். அரசனைக்காட்டிலும் செல்வச்சிறப்புடையான் ஒருவனும் உலகத்திலில்லையன்றோ? அங்ஙனமாக, அத்தகைய அரசனுக்கும் கற்றோனுக்குமுள்ள தாரதம்மியத்தைத் தெள்ளிதிற் கற்பித்துக் கல்வியுடையோரது பெருமையை விளக்குகின்ற கீழ் வரும் இரண்டுபாடல்களும் அறியத்தக்கன.

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்— மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

"பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்"

இவற்றாற் கல்வியுடையான் எங்கேசென்றாலும் அவனுக்கு மேன்மையே கிடைக்கும் என்றும், ஆகலால் அவனைத் துன்பம் வந்தணுகாதென்றும், செல்வமுடையவனாகிய அரசன் தன்தேசத்தை விட்டுப் பிறதேசத்துக்குச் செல்லுவானாயின், அங்குள்ளோர்கள் அவனைத் தெரிந்திராதலாலும், தெரிந்தாலும் அவர்களும் செல்வமுடையவராயிருப்பின், நம்மைப்போல இவனுமொருவனென்று மதியாராதலாலும் செல்வமுடையரல்லாதார் மதிக்கும்மதிப்பை அவ்வரசன்தேடானாதலாலும், வேறுவகைகளால் அவர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய காரணங்கள் அவனிடத்தில் இல்லாமையாலும், அவனுக்கு அச்செல்வம் பயப்பது துன்பமேயாமென்றும் நாம்விரித்துப் பொருள் கொள்ளக்கிடக்கிறது. ஆகையால், அரசனாயிருப்பினும் தன் புத்திரனைக் கல்வியுடையனாக்குதலைக் காட்டிலும் செல்வமுடையவனாக்குதலில் மேன்மையில்லையென்று குறிப்பாகத் தோன்றுதலால், ஏனையோர்களும் தங்களுடையபுத்திரர்களைக் கல்வியுடையராக்க வேண்டுமென்பது சொல்லாதேயமையும்.

பெண்கொள்ளப்போமிடத்தும் அப்பெண்களின் தந்தைமார் இப்பிள்ளை கல்வியிற் பரந்த ஞானமுடையவனா இருக்கின்றானா? என்று கவனிப்பதே பெருவழக்காம். இதனை நாலடியிலும் காணலாம். "கல்வியிற் குறையா ஞான, பலமீவண்டு மென்றிருப்பார் தந்தைமார்" "பெண்ணுதவுங் காலைப் பிதா விரும்பும் வித்தையே" என்பனவற்றைக் காண்க. உலகத்திற் றங்களுடைய புத்திரர்களுக்குக் கல்யாணஞ்செய்வித்துக் களித்திருத்தலை விரும்பாதார் பெரும்பாலும் இரார். இதனைக் "கல்யாணமுடித்துக் காணேனா" "இவன் கழுத்தில் மாலைவிழுந்தபிறகாவது சாகமாட்டேனா" "சடங்குமுடித்துச் சாகேனா" என்ற வழக்குகள் வற்புறுத்தும். இவற்றாற் கல்யாணஞ் செய்வித்தல் காரணமாகவாவது யாவரும் தங்களுடைய புத்திரர்களைக் கல்வியுடையராக்கியே யிருப்பார்களென்றும், கல்வியுடையராக்காதார் கல்வியுடையராக்க வேண்டுமென்றும் தெளிக. இன்னும் "புருஷராய்ச் சனனமெடுத்தபேர் மெய்ஞ்ஞானபோதத்தை யடைவதென்று" என்ற

விடத்தில் மெய்ஞ்ஞானபோதத்தையடைவது கல்வியறிவாலென்று கொண்டு, கல்விப்பெருமையைக் காண்க. "பழுதில் கலைகள் மிகப்புரிந்தும் பயந்த மைந்தர் தமையவர்க்குக், குழுமு மவையின் முந்திருப்ப வறிவு கொளுத்தல் வேண்டுமால்" என்று பெரியோர்கள் தங்கள் நூல்களில், நாயனார்கூறிய "அவையத்து முந்தி யிருப்பச் செயல்" என்றதன்கருத்தை உள்ளது உள்ளவாறே போற்றி எடுத்தாண்டிருக்கிறார்கள். இதனாலும் கல்வியுடையார்க்குக்கல்வின் பெருமை விளங்கும். இவற்றையெல்லாம் யோசித்து மேலோர் ஆசாரத்தை யநுசரித்த பெரியோர்கள் தங்கள்புத்திரர்களை மேலோரவையின் முந்தியிருக்குமாறு கல்வியுடையார்களேயிருப்பார்களென்று நாம் துணியவேண்டும்.

இனி இத்தகைப் கல்வியுடையனுக்கியதந்தைக்கு மகன் செய்யும் பிரதியுபகாரம் யாதென்று நாம் யோசிக்குமிடத்துத் தன்னுடைய கல்வியறிவையும் ஒழுக்கத்தையும் பார்த்தவர்கள் இத்தகைய புத்திரனைப் பெறுவதற்கு இவனுடைய தந்தை எத்தகைய தவத்தைச் செய்திருப்பான் என்று சொல்லும்படியான சொல்லை உலகத்திலே உண்டாக்குதலாம். இவற்றையெல்லாம் உள்ளடக்கியே நாயனார்,

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்று சுருக்கிக் கூறியுள்ளார்.

இத்தகைய உதவியைத் தம் தந்தைமார்க்குச் செய்து சிறப்புற்றமைக்கு ஸ்ரீ ராமபிரானும் தருமபுத்திரனும் பெருஞ்சான்றாவர். இவ்விருவரது குணவிசேடங்களையும் இராமாயணத்தையும் பாரதத்தையும் படித்தறிந்தோர்களும் கேட்டறிந்தோர்களும் நன்குதெரிந்திருத்தல் கூடும். படித்தறியாதோரும் கேட்டறியாதோரும் படித்தும் கேட்டும் அறிந்துகொள்ளலாம்.

S. ஆழ்வாரையங்கார்,
உதவியுபாத்தியாயர்,
க. வி. கலாசாலை தேர்க்கை.

# ஐரோபிய யுத்தத்தில் யார் ஜயம்பெறுவார்?

நமது நண்பர்கள் ஒவ்வொருவரும் இப்பெரிய யுத்தம் சீக்கிரம் முடிவடையவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்களென்பது உண்மையான விஷயம். இதைக்குறித்து பம்பாயில் பிரசுரமாகும் டைம்ஸ் ஆப் இந்தியா என்னும் பத்திரிகையில் ஒரு வேடிக்கைத் துணுக்கு காணப்படுகிறது. பலர் படித்துத் தெரிந்துகொள்ளுவதற்காகவே கீழே குறிப்பிடுகிறேன்.

| | |
|---|---|
| நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தி இங்கிலாந்து அரசர் பிறந்த ௵ | 1865 |
| இராஜ்யபாரத்தை வகித்த ௵ | 1910 |
| அரசாண்டுவரும் காலம் | 7 |
| நடப்பு வயது | 52 |
| | 3834 |

| | |
|---|---|
| பிரசிடெண்ட் வில்சன் பிறந்த ௵ | 1856 |
| இராஜ்யபாரத்தை ஒத்துக்கொண்ட வருஷம் | 1912 |
| அரசாண்டு கொண்டு வரும்காலம் | 5 |
| நடப்பு வயது | 61 |
| | 3834 |

| | |
|---|---|
| பிரசிடெண்ட் பயன்கேர் பிறந்த ௵ | 1860 |
| இராஜ்யத்திற்கு வந்த ௵ | 1913 |
| அரசாண்டுகொண்டு வரும் காலம் | 4 |
| நடப்பு வயது | 57 |
| | 3834 |

| | | |
|---|---|---|
| இடலி அரசர் பிறந்த | ௵ | 1869 |
| இராஜ்யத்திற்கு வந்த | ௵ | 1900 |
| அரசாண்டு கொண்டுவரும் காலம் | | 17 |
| நடப்பு வயது | | 48 |
| | | 3834 |

| | | |
|---|---|---|
| ருஷிய சக்கிரவர்த்தி பிறந்த | ௵ | 1868 |
| ராஜ்ய பாரத்தை வகித்த | ௵ | 1894 |
| அரசாண்டு கொண்டுவரும் காலம் | | 23 |
| நடப்பு வயது | | 49 |
| | | 3834 |

| | | |
|---|---|---|
| பெல்ஜியம் அரசர் பிறந்த | ௵ | 1879 |
| ராஜ்யத்திற்கு வந்த | ௵ | 1912 |
| அரசாண்டு கொண்டுவரும் காலம் | | 5 |
| நடப்பு வயது | | 38 |
| | | 3834 |

| | | |
|---|---|---|
| ஜப்பான் சக்ரவர்த்தி பிறந்த | ௵ | 1879 |
| ராஜ்யபாரத்தை வஹித்த | ௵ | 1912 |
| அரசாண்டு கொண்டுவரும் காலம் | | 5 |
| நடப்பு வயது | | 38 |
| | | 3834 |

| | | |
|---|---|---|
| ஸெர்விய ராஜா பிறந்த | ௵ | 1844 |
| ராஜ்யத்திற்கு வந்த | ௵ | 1903 |
| அரசாண்டு கொண்டுவரும் காலம் | | 14 |
| நடப்பு வயது | | 73 |
| | | 3834 |

| | |
|---|---|
| பாண்டிச்சேரோ அரசர் பிறந்த | வரு 1841 |
| ராஜ்யத்திற்கு வந்த | வரு 1910 |
| அரசாண்டு கொண்டுவரும் காலம் | 7 |
| நடப்பு வயது | 76 |
| | 3834 |

3834 இரண்டால் வகுத்தால் வரும் ஈவு 1917 ஏன் இரண்டால் வகுக்கவேண்டும் என்ற சந்தேகம் சிலருக்கு உற்பவிக்கலாம். அதற்குக்காரணமாவது:— நமது நேசக்கக்ஷியார் ஒருபக்கமும் ஜெர்மன்கக்ஷியார் மற்றோர் புறமும் இருப்பதால்தான். குறிப்பு:— நேசக்கக்ஷியார்களின் பிறந்த வருஷம் அரசாக்ஷிக்கு வந்த வருஷம் அரசாண்டு கொண்டுவரும் வருஷம் நடப்புவருஷம் எல்லாம் சரியாகவே வருவதன் நிமித்தம் நம் நேசக்கக்ஷியார்களுக்கே கட்டாயமாய் ஜயம் உண்டாகுமென்பது உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.

R. ராஜகோபால்ராவ்
சுதேசமித்திரன் பிரதிநிதி.

## அதிசய விஷயங்கள்.

1. தூக்கணாங்குருவி:—இந்தப்பக்ஷி நாளொன்றுக்கு 6000 பூச்சிகளை விழுங்கும்.

2. ஒருமுறையில் இரண்டு கன்றுக்குட்டிகள்:—தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூகா பூண்டிக்கிராமத்தில கோடிக்கால் தெருவில் இருக்கும் பொசாமிப்பிள்ளை யென்பவர் வீட்டில் ஒருபசுமாடு ஒரே முறையில இரண்டு கன்றுக்குட்டி போட்டுச் சவுக்கியமாய்ப் பாலுக் கறந்து வருகிறது.

3. பேசும்பூனை:—யாழ்ப்பாணம் சிவன்கோவில் வடக்குவீதியில் சசி என்பவன் வீட்டில் ஓர்பூனை இருந்ததாகவும், அது எவர்கள் எந்தமாதிரி பேசினார்களோ அதேமாதிரியாகத் திருப்பிப்பேசினதாகவும் சொல்கிறார்கள்.

இந்துநேசன்.

உ

சிவமயம்.

# சுலக்ஷணை.

—(:❀:)—

உலகை மயக்கு முருவமார் பெண்கள்
திலகஞ் சுலக்ஷணை தேவி—யிலகவடன்
காதை நவினவழி காசினியிற் சொல்லநா
மாதை மனதே மதி.

## வயோதிகன் வதுவை.

—:(o):—

நீண்டு அடர்ந்த சோலைகளாலும், சண்பகம் மந்தாரம் பாரிஜாதம் டிரீஞாஞ்சிதம் இருவாட்சி ரோஜா மல்லிகை முல்லை முதலான மரஞ் செடி கொடிகளோடு கூடிய நந்தவனங்களாலும், களங்கமற்ற படிகத்தைப்போல் தன் அடிப்பாகத்துள்ள பொருள்களை விளக்கக்கூடிய நீர் நிறைந்ததும், தென்னை கமுகு மா பலா வாழை முதலிய விருக்ஷங்கள் சூழப்பெற்றதுமான தடாகங்களாலும், கடலோ எனக் கண்டோர் அதிசயிக்கும் கருநீலநிறம் வாய்ந்த அலைகள் இரைந்து ஆர்ப்பரிக்கும் அகழியாலும், கைதேர்ந்த சிற்பிகளால் நவநவமான நாஞ்சில்கள் அமைக்கப்பெற்ற கோட்டைச்சுவராலும் சுற்றிலும் அலங்கரிக்கப்பட்டு நடுவே நாற்புறமும் நான்கு கோபுர வாயில்களையும் ஆஸ்தான நிலையங்களையும் அந்தப்புரமாளிகைகளையும் ஆலோசனைஸ்தானங்களையும் பற்பல நிலவறைகளையும் தன்னிடத்து அமையப்பெற்ற புவனாலயத்து அரண்மனையின் பொற்சிகரங்களின்மேல், அனலுரு ஆடிமீ கூட காலை ஆருமவரிக்கு ஆகாயத்தில் பரமபுருஷனான மஹாவிஷ்ணுவின் சரீர காந்தியை நிகர்த்த நீர்கொண்டு இருண்ட மேகங்களின் மேல் விளங்குகின்ற வானவில்லினிடையில் உதயமாகிற சூரியனது கிரணங்கள் பிரகாசித்தன.

மேற்கூறிய அரண்மனையானது சுமார் நானூறு வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டது. இந்த அரண்மனையின் பெரும்பாகம் உபயோகப் படுத்தப்படாமல் சாத்தப் பட்டிருக்கிறது. யாராவது விருந்தினர் வந்தால் மாத்திரம் சாத்தப் பட்டிருக்கு மிடங்கள் திறந்து காட்டப்படும். அரண்மனையின் பின்பாகத்தில் உபயோகமில்லாதிருக்கும் இடத்தில் உள்ள ஒரு பெரிய சுரங்கத்தில் அவ்வரண்மனையின் சொந்தக் காரர்களுடைய முன்னோர்களின் சவப்பெட்டிகள் வைக்கப் பட்டிருக்கின்றன. சலவைக் கல்லாற் செய்யப்பட்ட சிலையொன்று அங்கு இருக்கின்றது. அரண்மனைக்கும் அதைச் சார்ந்த தோட்டத்திற்கும் பின்னால் பெரிய நதியொன்று ஓடிக்கொண்டிருக்கின்றது.

நம்முடைய கதையாரம்பத்தில் இந்தப் புராதனமான அரண்மனையின் சொந்தக் காரராயிருந்த ஜமீந்தாரின் பெயர் மானவன். அவருக்கு சுவேதவதி என்னும் பட்டணத்திலும் ஒரு அரண்மனை உண்டு. சுவேதவதி புவனாலயத்திற்கு நூறு மைலுக்கு அப்பாலுள்ள பட்டணம். புவனாலயம் ஜமீந்தார் பெரும்பாலும் சுவேதவதியிலுள்ள அரண்மனையிலேயே வசித்து வந்தார். இவருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். இவருடைய மனைவி இளமையிலே இறந்து விட்டபடியால் இவர் தனியாய் வசித்து வந்தார். தமக்குப் பிள்ளைகள் இல்லாததனால் இவர் தம்முடைய தம்பி மகனாகிய துஷிதன் என்பவனைச் செல்வமாய் வளர்த்தார். துஷிதனுடைய தாய்தந்தையர் அவனுடைய சிறுபிராயத்திலேயே இறந்து விட்டனர். அவனுக்கு வயது வந்தபின், அவன் தன் பெரியதகப்பனார் மேற்பார்வையிலில்லாமல் தன்னிஷ்டப்படி திரியலானான். மானவனும் தம் சகோதரன் புத்திரனைக் கவனித்துப் பாராமல் அவனுக்கு வேண்டிய பணத்தை மாத்திரம் கொடுத்துவந்தார். துஷிதன் கெட்ட சிநேகிதர்களுடன் கூடி மனம்போனபடி யெல்லாம் திரிந்து சூதாடியாகவும் பெருங்குடியனாகவும் ஆனான். அவன் தன் மிதமிஞ்சிய செலவிற்கு ஜமீந்தார் கொடுக்கும் பணம் போதாமல், மானவன்

இறந்த பிறகு அவனுடைய ஆஸ்தியெல்லாம் தன்னைச் சேரப் போகிறதென்று சொல்லி ஏராளமான தொகையைக் கடன்வாங்கிச் செலவு செய்தான்.

துஷிதனுடைய நிலைமை தெரிந்தபோது, மிகவும் கோபம் கொண்டு அவனுக்குத்தன் ஆஸ்தி சேராமலிருக்க வழி தேடவேண்டு மென்று, மானவன் தீர்மானித்துக் கொண்டார். இத்தத் தீர்மானத் துடன் அவர் சுவேதவதியிலிருந்த புவனாலயத்திற்குச் சென்றார். அங்கே அவருடைய குடியானவனொருவனுக்கு சுலக்ஷணை என்னும் பெயருடைய அழகுவாய்ந்த புத்திரி ஒருத்தி இருந்தாள். சுலக்ஷணை பதினாறு வயதுள்ள பெண். ஜமீந்தார் சுலக்ஷணையைக் கல்யாணம் செய்து கொள்ள உத்தேசித் திருப்பதாகச்சொன்னார். அவளுடைய தாய்தந்தையர்கள் ஜமீந்தாரின் வயதைப் பாராமல் அவருடைய ஆஸ்தியையும் அந்தஸ்தையும் பார்த்துப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க ஒத்துக் கொண்டார்கள். கல்யாணமும் ஒரு சுபதினத்தில் மங்களமாய் நிறைவேறிற்று. இதை வாசிக் கும் நேயர்களே! இந்தக் கல்யாண தம்பதிகள் வயதால் மிகுந்த தாரதம்மியம் உடையவர்களென நீங்கள் நினைக்கலாம். விதவா விவாகம் கூடாதென்ற கட்டுப்பாட்டையுடைய பிராமணர் முதலிய ஜாதியாருள்ளும் இதனினும் ஏற்றத் தாழ்வான பிராயமுள்ள மண மகனும் மணமகளும் காணப்படுகிறார்களென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே.

தன்னுடைய பெரிய தகப்பனாரின் கல்யாணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது துஷிதன் "கிழவன் கலியாணம் செய்து கொண்டாலென்ன? அவனுக்குச் சந்ததி உண்டாக மாட்டாது. ஆகையால் அவன் இறந்த பிறகு அவனுடைய அளவிறந்த சொத் தும் ஜமீந்தார் என்ற பட்டமும் நம்மைத்தான் சேரும்" என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

கல்யாணம் நடந்து ஒரு வருஷமானதும் சுலக்ஷணைவிற்கு விமலா என்ற ஒரு பெண்குழந்தை பிறந்தது. விமலா பிறந்த இரண்டு

வருஷங்கட்கெல்லாம் அசிரா என்ற மற்றொரு பெண் குழந்தை உற்பவித்தது. பின்னும் இரண்டு வருஷம் சென்று மதிமான் என்ற ஓர் ஆண் குழந்தையைச் சுலக்ஷணை பெற்றாள். அக்குழந்தைக்குத் தோளில் கிளிமூக்கு மாங்காய் போன்ற மச்சமொன்றிருந்தது. அந்த மச்சத்தைப் பார்த்தவர்கள், சுலக்ஷணை கர்ப்பமாயிருந்த போது மாம்பழத்தின்மேல் ஆசைப்பட்டிருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டார்கள்.

மானவனுக்கு ஆண்குழந்தை பிறந்த செய்தியைக் கேட்ட துஷிதன் மனதில் கலக்கம் உண்டாயிற்று. அவனுக்குக் கடன் கொடுப்பவர்களும் கொடுக்கமாட்டோமென்றார்கள். ஆகையால் துஷிதன் எப்படியாவது மானவனுடைய ஆண்குழந்தையைத் தொலைக்க வழிதேடினான். இதற்காக வீரசிங்கம் என்ற பக்காத் திருடனைக் கண்டு அவன் மூலமாய் ஏற்பாடுகள் செய்தான். அத்திருடனுக்குச் சுமார் இருபத்துமூன்று வயதிருக்கும். ஐந்நூறு ரூபாய் கொடுத்தால் மானவனுடைய ஆண்குழந்தையைத் திருடிக் கொண்டுவந்து கொன்று விடுவதாக அவன் துஷிதனிடம் சொன்னான். அதற்குச் சம்மதித்து துஷிதன் வீரசிங்கத்திற்கு இருநூறு ரூபாய் முன்பணமாகக் கொடுத்தான்.

வீரசிங்கம் புவனலைப்பக்கத்திற்குப்போய்ச் சிலநாட்கள்வரை ஜமீந்தாரின் அரண்மனையைச் சுற்றித்திரிந்துகொண்டிருந்தான். ஒருநாள் ஒருவேலைக்காரி பிறந்துமூன்றுமாதமானமதிமான் என்னும்குழந்தையைக் காற்றுக்காக வெளியே கொண்டு போனாள். ஒரு மரத்தடியில் பதுங்கிக்கொண்டிருந்த வீரசிங்கம்திடீரென்றுவெளிப்பட்டு, வேலைக்காரியின்கையிலிருந்தகுழந்தையைப் பிடுங்கிக்கொண்டுகாட்டுக்குள் நுழைந்தோடிவிட்டான். அக்குழந்தையின்கதிஎன்னாயிற்றென்பதை இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியமில்லை. வீரசிங்கம் குழந்தையின் மேல்வஸ்திரங்களைக்கொண்டுபோய்க்காட்டி, தான் அதைக் கொன்று விட்டதாய்ச்சொல்லி துஷிதனிடமிருந்து பாக்கி மூந்நூறு ரூபாயையும் பெற்றுக் கொண்டான். துஷிதன் தன்மேல் சந்தேகம் வாராதபடி சுவேதவதியிலேயே வசித்துவந்தான்.

வீரசிங்கம் பிள்ளையைப் பறித்துக்கொண்டு ஓட்டமெடுத்தவுடன், வேலைக்காரி அலறிக்கொண்டு அரண்மனைக்குப்போய் நடந்த சமாசாரத்தைச்சொன்னாள். அரண்மனையில் பெருங்கூக்குரலுண்டாயிற்று. ஜமீந்தாரும் அவர் மனைவி சுலக்ஷணையும் மிகவும் கொடிய துக்கத்தை யடைந்தார்கள். பலதிசைகளிலும் பற்பல ஆட்கள் குழந்தையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பப்பட்டார்கள். தேடப்போனவர்களெல்லாம் குழந்தையைக் காணாமல் திரும்பிவிட்டார்கள். சுலக்ஷணை நல்ல தைரியமான மனத்தையுடையவளாதலால் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு புருஷனுக்கும் தேறுதல் கூறி, அவரைப்பார்த்துப் பின்வருமாறு சொன்னாள்- "துஷிதன்தான் நம்முடைய குழந்தையை ஆள்வைத்துத் திருடியிருக்கவேண்டும். அவன் குழந்தையைக் கொன்றிருக்கமாட்டான். தங்களிடத்தில் ஏதாவது பணம் பறிக்கலாமென்று அதை மறைத்து வைத்திருப்பான். நான் எல்லாவற்றிற்கும் சுவேதவதிக்குப்போய் விசாரிக்கிறேன். நீங்கள் என்னுடன் கூடவரவேண்டாம். நான் என்னைப் புவனாலயம் ஜமீந்தாரிணி என்று தெரிவித்துக் கொள்ளாமல் ஒரு சாதாரண ஸ்திரீயைப் போலிருந்து விசாரித்தாற்றான் துப்புத்தெரியும்." மானவன் அதற்குச் சம்மதிக்க சுலக்ஷணை புவனாலயத்திலிருந்து புறப்பட்டுச் சுவேதவதி போய்ச் சேர்ந்தாள்.

சேர்ந்து பத்துப்பதினைந்து தினங்களான பிறகு பிள்ளை இருக்கிற இடம் தெரிகிறதாகவும், தான் அதை உயிருடன் பார்த்ததாகவும், இன்னும் சிலதினங்கள் சென்றுதான் பிள்ளையைத் திருப்பிக்கொண்டுவரமுடியுமென்றும் சுலக்ஷணை ஜமீந்தாருக்கு எழுதினாள். கிழப்பிராயத்தில் அருமையாகப்பெற்ற ஆண்குழந்தையைக் கள்ளர் கைப்பற்றின துக்கத்தினால் மனமுடைந்து நோயுற்று வருந்திய மானவன், குழந்தை உயிரோடிருக்கிறான் என்று எழுதியிருந்த மனைவியின் கடிதத்தைப் பார்த்ததனால் உண்டாகிய மிதமிஞ்சிய சந்தோஷத்தால், அதிக வியாதியை யடைந்தான். மிதமிஞ்சிய சந்தோஷம் மனமாறாட்டத்தையும் மரணத்தையுங்கூட உண்டு

பண்ணுமென்பதை, சிலநாட்களுக்குமுன் நடந்த பம்பாய் லாட்டரியில் பெரும்பரிசு கிடைத்த ஒரு சாமானியனுக்கு ஏற்பட்ட எல்லையற்ற சந்தோஷம் சித்தப்பிரமையை உண்டுபண்ணியதும், அமெரிக்காவில் பிச்சையெடுத்து ஜீவனம் செய்துவந்த ஒரு ஸ்திரீக்கு லாட்டரியில் கிடைத்த பெரும்பரிசினால் உண்டாகிய அளவுகடந்த சந்தோஷம் மரணத்தைவிளைவித்ததும், நன்குவிளக்குகின்றன. இது நிற்க, வியாதி நாளுக்குநாள் அதிகப்பட்டு மானவன் இறந்துபோனார்.

இச்செய்தியைக் கேட்ட துஷிதன் தன் பெரியதகப்பனார் இறந்துவிட்டபடியால் தான் புவனாலயம் ஜமீந்தார் ஆகிவிட்டதாய் எண்ணிக்கொண்டு புவனாலயத்திலிருக்கும் அரண்மனைக்கு வந்தான். புருஷனிறந்த செய்தியைக் கேட்ட சுலக்ஷணாவும் அதேசமயத்தில் புவனாலயத்திற்கு வந்தாள். சுலக்ஷணாவைப் பார்த்து துஷிதன் சொல்லுகிறான், "நீ ஐந்தாறு வருஷத்திற்குமுன் ஒரு சாதாரணக் குடியானவன் மகளாயிருந்தாய். இப்பொழுது நீ மறுபடியும் அந்த நிலைமைக்கு வந்துவிட்டாய். நான் அப்பொழுது ஜமீனுக்கு வாரிசாயிருந்தேன். இப்பொழுது ஜமீந்தாராகி விட்டேன்."

சுலக்ஷணா, "நீ அப்பொழுது இருந்தபடியே இப்பொழுதும் இருக்கிறாய். என்னுடைய காணாமற்போன கண்மணியாகிய மதிமான் அகப்பட்டுவிட்டான். அவன்தான் இப்பொழுது ஜமீந்தார்" என்று சொல்லிக் குழந்தையை எடுத்துக் கொண்டுவந்து அதன் தோளிலிருந்த கிளிமூக்கு மாங்காய்போன்ற மச்சத்தைக் காட்டினாள். குழந்தையையும் அதன்தோளிலிருந்தமச்சத்தையும் பார்த்தவுடன் துஷிதன் பிரமித்துப்போனான். அவனுடைய எண்ணங்களெல்லாம் வீணாயின.

தன்னுடைய பரிதாபகரமான நிலைமையைச் சுலக்ஷணாவிற்குத் தெரிவித்து, தன்னிடத்தில் இரக்கங்காட்டும்படியாகத் துஷிதன் அவளைப் பிரார்த்தித்தான். அவளும் அவனுக்கு இரங்கியதாகச்சொல்லி அன்று இரவு பத்துமணிக்குவந்தால் அரண்மனையிலுள்ள நிலவறைகளொன்றில் பதினாயிரம் ரூபாய் ஒளித்துவைக்கப்பட்டிருப்பதாகவும், அதிற் பாதியை அவனுக்குக் கொடுப்பதாகவும் சொன்னாள்.

அவன் அப்பணத்தை வாங்கிக்கொண்டு தூரதேசத்திற்கு ஓடிப்போய்விட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அதற்குச்சம்மதித்துத் துஷிதன் இரவு பத்துமணிக்கு வந்தான். அரண்மனையிலுள்ள நிலவறைகள் அதற்குப்பின்னால் ஓடின ஆற்றிற்குக் கீழே தோண்டப்பட்டிருந்தன. சுலக்ஷணை தன் அந்தரங்கத்தாதி கமலினி என்பவளைச் சுரங்கவாயிலில் வைத்துவிட்டுத் துஷிதனை உள்ளே கூட்டிக்கொண்டு சென்றாள்.

இது நிற்க, வீரசிங்கம் துஷிதனிடமிருந்து வாங்கின ரூபாய் ஐந்நூறும் செலவழித்துவிட்டபடியால், மறுபடியும் துஷிதனிடத்திற்குப் போனால் அவன் ஏதாவது வேலை ஏவிக் கூலிகொடுப்பான் என்று நினைத்து அவனைத்தேடினான். அவன் புவனாலயத்திற்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே போய்விசாரித்தான். புவனாலயத்திலிருந்து துஷிதன் திடீரென்று திரும்பிப்போய்விட்டதாகவும், மானவனுடைய காணாமற்போன குழந்தை அகப்பட்டுவிட்டதாகவும் அவன் காதிற்கு எட்டிற்று.

அவ்வளவு தூரம் வந்துவிட்டுச் சும்மா திரும்பக்கூடாதென்று எண்ணித் தன்னைப்போன்ற திருடர்கள் சிலரைச்சேர்த்துக்கொண்டு ஒருநாளிரவில் ஜமீனரண்மனைக்குள் புகுந்தான். ஏதோ சத்தப்பட்டபடியால் திருடர்களென்று வேலைக்காரர்கள் அரண்மனையில் அங்குமிங்கும் தேடவாரம்பித்தார்கள். வீரசிங்கமும் அவன்கூட வந்தவர்களும் இருட்டாயிருந்த சுரங்கமொன்றில் ஒளிந்துகொண்டார்கள். வேலைக்காரர்கள் தேடி முடிந்ததும் வீரசிங்கம் ஒரு விளக்கைப் பற்றவைத்தான். சுரங்கத்தில் ஒருவழி தோன்றிற்று. அந்த வழியாய்ப் போய்ப்பார்க்க ஒரு நிலவறையில் தண்ணீர் நிரம்பியிருந்தது. அதில் ஒரு மனித சரீரம் மிதப்பதைக்கண்டு வீரசிங்கம் சமீபத்தில் போய்ப்பார்க்க, அது துஷிதன் பிரேதமென்று கண்டான். பிறகு அவனும் மற்றத் திருடர்களும் சேர்ந்து அப்பிரேதத்தை வெளியே தூக்கிக்கொண்டுபோய், அதைப் புவனாலயத்திற்கு அச்சமயம் வந்திருந்த ஒருவைத்தியனிடத்தில் விற்றுவிட்டார்கள். வைத்திய ஆராய்ச்சியின் பொருட்டு அவன் அப்பிரேதத்தை விலைக்கு வாங்கினான்.

வ. வி. நடேசன்செட்டி.

(தொடரும்) ஆத்தங்குடி.

# ஸ்வாமி விவேகாநந்தர்.

"தர்மத்துக்குத் தாழ்வும் அதர்மத்துக்கு வாழ்வும் உண்டாகுங்காலத்து நான் அவதரித்து, துஷ்டர்களைச் சிக்ஷித்து, சிஷ்டர்களைப் பரிபாலித்துத் தர்மத்தை நிலைநிறுத்துகிறேன்" என்று ஸ்ரீகீதையில் ஸ்ரீ கண்ணபிரான் அருளிச்செய்திருக்கிற வண்ணமே, நமது ஸ்வாமிகளுடைய அவதாரத்தையும் கொள்ளவேண்டியிருக்கிறது. நமது பரதகண்டத்தில் அவ்வப்போது நேரும் சில விபரீத மாறுபாடுகளை யுத்தேசித்துப் பகவான் ஆசாரிய ரூபங்களாகவும் அரசரூபங்களாகவும் வெளித்தோன்றித் தமது திருவிளையாடல்களைச் செவ்வனே நடத்திச் சென்றுளாரேனும், அவரது அவதார ரூபங்கள் யாவும் மறைந்துவிட்டனவாக நாம் கொள்ளாமல், இன்றும் நமது ஒவ்வொருவர் உள்ளத்திலும் அவ்வுருவங்கள் நின்று நிலவுவனவாகக்கொண்டு அநுபவித்துவருகிறோம் என்பது உண்மையேயாகும். அங்ஙனமே நமது ஸ்வாமிகளும் அவதரித்துத் தமது திருவிளையாடல்களைச்செய்துவிட்டு மறைந்துளாரேனும், நாம் அவரை மறைந்துள்ளவராகக் கொள்ளாமல், நம்மனோர் கருத்துக்களில் இருத்தி மகிழ்கிறோம். அவரது விஜயங்களைப் புகழ்கிறோம். அவரது உபதேசங்களை யுணர்கிறோம். அவரது உருவத்தைத் தரிசிக்கிறோம். அவர்காட்டிய வழியில் நடக்கிறோம். அவர் இட்டுள்ள கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம். அவர் வகுத்துள்ள கோட்டிற்கு உட்பட்டிருக்கிறோம். ஆதலினால் அவர் இன்றும் புகழுடம்புடன் இப்பூமியில் விளங்குகிறார் என்பதே உண்மை. நேயர்களே! நமது ஸ்வாமிகளது உபந்யாஸ உபதேசங்களால் நாம்மாத்திரமன்றி நமது பிற்சந்ததியாரும் நன்னோக்குடையாராவார் என்பதில் யாதும் சந்தேகமில்லை. இவர்களைப்போல் அநேக மஹான்கள் அவதரித்து அருள்செய்திருக்கிறார்கள். நமது பரதகண்டந்தவிர வேறு கண்டங்கள் மஹான்களுக்கு அவதாரஸ்தலங்களாக ஏற்பட்டிருக்க உணர்கின்றிலோம். நமது ஆசியாகண்டம் தவிர வேறொரு கண்டம் தேசிகர்களின் அவதாரங்கட்குத் தேர்ந்தகண்டமாகத் தெரிந்தெடுக்கக் காண்

கின்றிலோம். இதுசரித்திர வுண்மை. மஹான்களெல்லாம் அவதரிக்கிறது உலகத்தினது தர்மத்தை உயர்த்துவதற்கென்றேயெனச் சரித்திரம் குறிக்கின்றது. அவர்கள் தமது அவதாரதேசத்தினர்க்கு அவசியம் வேண்டியதாகியிருக்கும் காரியங்களைப் பூர்த்திசெய்து அவர்களை ஸமபலமுடையவராக்குவதற்கென்றே அவதரிக்கிறார்களெனச்சரித்திரம் ஓதுகின்றது. இதுவே அவதாரத்தின் உண்மையுமாகும். உதாரணமாக ஸ்ரீராமபிரானுடைய அவதார ரஹஸ்யத்தை எடுத்துக்கொள்வோம். அந்தக்காலமும் அந்தக்காலத்திலிருந்த நிலைமையுமே ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியினது அவதாரத்தை வேண்டி நின்றன என்பது கொள்ளக்கிடக்கின்றது.

அக்காலங்கள், ஸாதுக்களின் தர்மங்கள் ஏற்றத்தையடையப் பெறாமல், தேசத்தில் கலகமும் கலக்கமும் மிகுதிப்பட்டிருந்தமையால், ஆசாரங்களும் அநுஷ்டானங்களும் மாறுபடும் நிலைமையுண்டாயிருந்ததுண்மையென்று ஸ்ரீராமாயணம் எடுத்துக் காட்டும். இராவணன் என்னும் கொடிய அரசனால் இவ்விதக் கலக்கங்கள் உண்டாயிருந்தனவென்று அது கூறுகிறது. அப்போதுதான் லோகமித்திரராகிய விசுவாமித்ரமுனிவர் துணிந்தெழுந்து தீர்க்காலோசனையுடன் தேடித்திரிந்து, அஸத்பாவங்களையெல்லாம் ஒழிக்கும் ஸத்சக்தியுடையவனாகிய ஸ்ரீராமபிரானது அவதார ரஹஸ்யத்தையுணர்ந்துகொண்டு அயோத்திக்குவந்து அந்த வள்ளலாகிய சுந்தரவில்லியை அழைத்தேகினார். இந்தத் தேவதூதராகிய விச்வாமித்திரரே தர்மதேவதைக்குத் தயவுள்ள தாயாவரர். இவரது நன்முயற்சியில்லாவிடின் தர்மமே சீர்குலைந்திருக்கும் என்று சொல்லத் தட்டில்லை.

இதனைப்போலவே, இக்காலத்திலும் நமது ஸதாசாராநுஷ்டானங்கட்குத் தாழ்வுநேரும் ஸந்தர்ப்பம் கிட்டவே, நமது ஸ்வாமியும் அழைக்கப்பட்டார். நமது தற்கால நாகரிகமான படித்த வகுப்பினர் என்று கர்வித்துள்ளவர்களிற் பலரைத் தங்களது பூர்விக ஆசாராநுஷ்டானங்களை மறக்கும்படிக்கும் அவசியமில்லாத சில மேல்நாட்டு அநுஷ்டானங்களைக் கைப்பற்றும்படிக்கும் செய்து

கொண்டிருக்கிறது. இந்த ஸமயத்தில்தானே ஒரு தேவதூதன் தெய்வாம்சமும் தெய்வசக்தியுமுடைய ஒரு மஹானை வெளிப்படுத்தவேண்டும். அப்படியே நமது தற்கால தேவதூதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர், பல காலநிஷ்டையின் பலனாக, நரேந்திரன் என்னும் பெயருடைய நமது விவேகாநந்த ஸ்வாமியை வெளிக்காட்டினார். ஒளிக்கு ஏற்றினார். ஸ்ரீ ராமபிரான் விசுவாமித்ர மஹரிஷியினது பிரஸாதங்களாகிய பலை அதிபலைகளால் பரிஷ்கரிக்கப் பெற்றதுபோலவே, நமது ஸ்வாமியும், ஸ்ரீபரமஹம்ஸ தேவரால் பரிஷ்கரிக்கப்பெற்று, இப்புதிய உலகத்திற்கு ஒரு பரமாசார்யராகக் கிளம்பி, தற்காலத்துத் தேவைகளையும் நன்கு தெரிவித்து அதற்கேற்ப ஹிந்துமத வுண்மைகளையும் எடுத்துக்காட்டி, பாழ்க்கிணற்றில் விழ விருந்தபலரைக் கரையில் உறுதியாக நிறுத்தினார்கள்.

அவர்களது உபதேசவுண்மைகள் யாவும் நூதனமல்லவேனும், பிராசீன அமுதமேபுதியபாத்திரத்தில் வார்க்கப்பெற்று விநியோகிக்கப்பெற்றனவாக உள்ளன. அவர்களது உபதேசங்கள், ஒவ்வொரு மனிதனுக்கும் தற்காப்பு ஆத்மதத்வ ரஹஸ்யம் ஏகாக்ரதை தன்னயங்கோராமை பரோபகாரம் ஆத்மமுன்னேற்றம் இவற்றை வற்புறுத்தக் கூடியனவாக விளங்குகின்றன. ஆத்யநிஷ்டையுடன் கூடிய வாழ்க்கையே ஒருவனைப் பரோபகாரத்திலும் ஆத்ம முன்னேற்றத்திலும் புகுவித்து உதவிசெய்யும் என்று அவரது உபதேசங்கள் விளக்குகின்றன. ஆகாயத்தில் முன்னேற விருப்பமுடைய ஒரு பறவைக்கு, அதனது இரண்டுசிறகுகளுமே ஸமபலத்துடன் உழைக்கவேண்டுவது போலவே, முன்னேற்றத்தை விரும்பிய ஒரு ஜீவனுக்கும் அவனது பரோபகார சிந்தையாகிய லௌகிக தர்மமும் ஆத்மோபகார அநுபவமாகிய வைதிக சிந்தையுமே உதவுகின்றனவென்று அவர்கள் குறிக்கிறார்கள்.

அவர்கள் இவைபோன்ற உண்மைகளை நம்மவர்க்கேயன்றி ஏனையோர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கி, அவர்களினும் பலரை நல்வழிக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். அவரது

உபதேசங்களின் உண்மைகள் நமது மாணவர்கட்கு நன்கு போதிக்கப்பெறின், அம்மாணவர் லௌகிக வைதிகங்களாகிய இரண்டுவிதமான விருத்தியினும் விருத்தியடைந்து வருவார்களென்று கருதுகிறோம்.

பத்திராதிபர்.

---

# புதுக்கோட்டைராஜ்யம்.

---

மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களாகிய ஸ்ரீ பிருஹதம்பாள்தாஸ ராஜ ஸ்ரீ மார்த்தாண்டபைரவத்தொண்டமான் பஹதூர் ஜி. ஸி. ஐ. இ. அவர்கள் தங்களது 11 வது வயதிலேயே 1886-ஷ ஜுலை மாதத்திலே பட்டத்துக்கு வந்தார்கள். அப்போது இந்த ராஜ்யமானது திவானாகவிருந்த ஸர் சேஷையா சாஸ்திரியார் அவர்களது மேல்பார்வையிலிருந்து வந்து நல்லசீர்திருத்தத்தைப் பெற்றிருக்கிறது. ஸர் சேஷையா சாஸ்திரிகள் மந்திரிஸ்தானத்துக்குவந்த வருஷம் 1878. 1894 வருஷத்தில் மகாராஜா அவர்கள் ராஜாங்க நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டபோது சென்னைக் கவர்னர் துரையாகிய லார்ட் வென்லக் என்பவர் சொன்னதாவது:—" மஹாராஜ! இந்த ஸமஸ்தானம் சுமார் 20 வருஷங்கட்குமுன் தாழ்ந்த நிலைமையிலிருந்துகொண்டு இருந்தது. ஜனங்கள் எப்பொழுதும் வியாதியினால் பீடிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் தற்கால நிலைமையோ அதிகமாறுபாட்டையடைந்திருக்கிறது. எப்பக்கங்களிலும் உலகவாழ்க்கைக்கு ஏற்றஸாதனங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன, அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவும் நன்கு அமைக்கப்பெற்று நன்றாகக் கவனம் செலுத்தப் பெற்றுவருகிறது. தெருக்களும் வசதிகளும் சுத்தமாக்கப் பெற்றிருக்கின்றன. வரிவசூல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ராஜதானிப் பட்டணமும் தற்கால ராஜதானிப் பட்டணங்களைப்போல அழகாகவும் வாச போக்கியமாகவும் திருத்தியமைக்கப் பெற்றிருக்கிறது. இவையெல்லாம் நமது ஸர் சேஷையாசாஸ்திரிகளது நன்முயற்சியாலேயேயாக்கப்

பெற்றிருக்கின்றன. இவர்களே அழிந்து ஆழ்ந்துபோக இருந்த இந்த ராஜ்யத்தை இவ்விதமான தக்க நிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள்" என்பதாம்.

சுமார் 22 வருஷங்கட்கு முன்னே இவ்வசனங்கள் மஹாராஜா அவர்கட்குச் சொல்லப்பெற்றன. ஆனால் தற்காலத்திலோ இன்னும் அதிகமான செழிப்பும் செல்வமும் அழகும் அமைப்பும் சீரும் சிறப்பும் பொருந்தி விளங்குகின்றது என்பது சொல்லாமலே விளங்கக்கூடியது.

1894-வது வருஷத்தில் வருஷவரும்படியானது சுமார் 8½ லக்ஷம். 1912-வது வருஷத்தில் அதற்கு இரட்டிப்பாக 17 லக்ஷமாயிற்று. 1913-வது வருஷத்தில் 18½ லக்ஷமாக இருந்தது. 1894-வது வருஷத்தில் ஸ்டேட் இருப்பு 3 லக்ஷமாக இருந்தது. 1913-வது வருஷத்தில் 27½ லக்ஷமாயிற்று. இவையெல்லாம் அரசாங்க முறை நன்கு நடைபெற்று வரும் விதத்தையே வற்புறுத்திக்காட்டுகின்றன. தெருக்களும் ஜலவஸதிகளும் குடியிருப்பு வஸதிகளும் முன்னிலும் மேன்மையாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. குடிகளும் தொழின் முறைகளும் அதிகரித்துக் கொண்டுவருகின்றன. நாகரிகமும் விருத்தியடைந்து ஜனங்கள் படிப்பில் மிக்க ஊக்கம் காட்டி வருகின்றனர். எனவே, பலவிதங்களிலும் இந்தஸம்ஸ்தானமானது புரோவிருத்தியை யடைந்து கொண்டு வருகிறது.

(இந்த வியாஸத்தினுடைய தொடர்ச்சிகள் மாதந்தோறும் வெளியாகி வந்துகொண்டிருக்கும்.)

பத்திராதிபர்.

# சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

## பலவான்குடி மணிவாசக சங்கம்

### ஏழாவதாண்டு நிறைவு.

பிங்கலவருஷம் ஆவணிமீ 14உ புதன்கிழமை பிற்பகல் அக்கிராஸனாதிபதியாக இருந்து சபையை நடத்த ஒப்புக்கொண்டு விஜயஞ்செய்திருந்த ஸ்ரீமான் பி. வி. மாணிக்கநாயகர் அவர்களையும் ஸ்ரீமான் மு. வெங்கடசாமி நாட்டார் அவர்களையும் அவர்கள் இறங்கியிருந்த விடுதியிலிருந்து, மேளவாத்தியங்களுடன், சபைக்கு நகரத்தார் அழைத்து வந்தார்கள். பிறகு, கடவுள் வாழ்த்துக் கூறப்பட்ட பின் ஸ்ரீமான் நாயகர் அவர்களை அக்கிராஸனத்தமர்ந்து சபையை நடத்திவைக்கும்படி பிரேரேபிக்க, அவர்களும் அக்கிராஸனத்தமர்ந்தார்கள். பின்னர் ஸ்ரீமான் மு. மு. வீர. வீரப்பசெட்டியார் அவர்களால் வந்தனோபசாரமும், வி. வி. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ வீ. குமாரவீரையாவர்களால் அறிக்கைப் பத்திரமும் வாசிக்கப்பெற்றன.

அக்கிராஸனாதிபதி நாயகர் அவர்கள் எழுந்து, அக்கிராசனத்தமரவேண்டியவர்களினது லக்ஷணங்களைச் செவ்வனே கூறித் தாம் இதற்குத் தகாதவராக இருப்பதாய் அவையடக்கமாகக் கூறியும், நமது தேசத்திற் சைவம் ஓங்கியிருந்தபோது தேசம் வாழ்ந்தும், அது வாடியிருந்தபோது தேசம் தாழ்ந்தும் இருந்ததென்றும், இதுமாதிரியான சபைகள் ஏற்பட்டுச் சைவம் தழைக்க ஆரம்பித்திருப்பதால் தேசமும் செழிக்கத் தொடங்க ஆரம்பித்திருக்கிறதென்றும், நமது தாய்ப் பாஷையான தமிழானது யோகசாஸ்திர தத்வங்களை யநுசரித்த அக்ஷரங்களையும் ஸ்வரங்களையும் பெற்றிருக்கிறதென்றும், ஒருதேசம் பொருள் நிலைமையில் உயரவேண்டின் அத்தேசத்து விளைபொருள்கள் வெளித்தேசங்கட்குச் சென்று திரும்பாமல், அந்தத்தேசத்திலேயே செய்பொருள்களாக மாற்றப்பட்டுப் பணமாக்கப்படவேண்டுமென்றும், அத்தேசத்தவர் கூலிகளாக வெளித்தேசங்கட்குப் போகப்படாதென்றும், அதற்கு அத்தேசத்திலேயே கைத்தொழில்கள் ஆதரிக்கப்படல் வேண்டுமென்றும், [illegible] நமது நகரவணிகப்பிரபுக்கள் தமது பொருள்களை வெளித்தேசங்களிலிருந்து கொண்டுவந்து இந்தத்தேசத்திலேயே ஏழைகட்கும் தொழிலாளிகட்கும் உபயோகமாகும்பொருட்டுக் கோவில் குளம் மடம் ஸபை கலாசாலை ஆதிய உதவிகளைச்

செய்து தருவது தேசமுன்னேற்றத்துக்கும் ஆத்மமுன்னேற்றத்துக்கும் ஸாதகமாகஇருக்கிறதென்றும், இத்தொழில்கள் அவர்களது உத்தமக்குடிப்பிறப்பையும் பரம்பராப்ராப்தமான பெருந்தன்மையையும் காட்டுகின்றதென்றும் கூறிவீற்றிருந்தார்கள்.

பிறகு, தேசியமாணவர்கட்குப் பரிசுகள் அக்கிராஸனாதிபதியால் அளிக்கப்பெற்றன. பின்னர் "இன்சொல்" என்னும் விஷயத்தை ஸி. வி. மாணவன் வெ. கணேசன் என்பவன் மிக இனித்தசொற்களாற்பேசிஸபையை இன்புறுத்தினன். பிறகு "கற்பு" "கற்பின்மாட்சி" என்னும் இரண்டு ஒத்தவிஷயங்களை முறையே மு. மீனாட்சி, சொ. வள்ளியம்மை என்னும் பெயரிய ஸி. வி. மாணவிகளிருவரும் கம்பீரமாகவும் அழகாகவும்அநுபவமுறைபோலும்பேசிச் சபையை உத்ஸாகப்படுத்தினார்கள்.

பிறகு, கோகுர்க்கலாசாலைத் தலைமையாசிரியராகிய ஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள், "ஒற்றுமை" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு பலமுறைகளுடன் அழகாக விரித்துரைத்து, நமது தேசம் முன்னர் ஒற்றுமையுடனிருந்ததாலேயே செழித்திருந்ததென்றும், அந்த ஒற்றுமை ஜாதிக்கலப்பினாலும் யாவரும் சேர்ந்த பந்திபோஜன விவாஹாதிமுறைகளாலும் ஒற்றுமைப்பட்டிருக்கவில்லையென்றும், மன ஒற்றுமையினாலேயே அன்பும் அருளும் பூணைத்திருந்து கூட்டுறவு கொள்ளப்பெற்றுச் செழித்தோங்கியதென்றும் கூறியும் ஸ்ரீராமபிரான், பாண்டவர், போலக், காந்திமிவர்களது சரித்திரங்களை எடுத்துக் காட்டியும் மகிழ்வித்தார்கள். பிறகு, திரிசிரபுரம் ஸ்ரீமான் மு. நடேசமுதலியாரவர்கள் எழுந்து "சைவம்" என்னும் அரிய விஷயத்தைக் கைக்கொண்டு சிவபரத்வம் சைவத்தின் ஏற்றம் சைவர்களின் நன்மனப்போக்கு இவற்றை விரித்துக் கடவ்மடைதிறந்ததெனக் கம்பீரமாகக் கூறிஅமர்ந்தனர். பிறகு அக்கிராஸனாதிபதியவர்கள் இவ்விஷயங்கட்குத் தக்கமுகவுரை கூறிச சபையை ஆனந்திப்பித்தார்கள். அநுஷ்டானத்தின் பின்னர், இரவு 7-30 மணிக்கு அங்குவிஜயம் செய்திருந்த மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீமான் மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், "பாட்டும் உரையும்" என்னும் அருமையான விஷயத்தைப் பண்டைய புலவர்களது செய்யுள்களின் உதாரண முகங்களாலும் அவற்றின் உள்ளுறை நயம் இவற்றின் விரிவுரைகளாலும் தமது இயற்கையான இனிய வினயவசனங்களால் எடுத்துப் பரக்க வோதிச் சபையிலுள்ளோரையும் அக்கிராசனாதிபதியையும் மகிழ்வித்தார்கள். பின்னர், தலைவர் எழுந்து செட்டியார் அவர்களது உபந்யாஸத்தின் வியப்புக்களை நன்கு காட்டி இவர்களே பண்டைய நூல்களின் உரையாசிரியராக இருக்

கத் தகுதியானவர்கள் என்று கூறியும், தாம் தமிழ்ச்சொற்களின் எழுத்துக்களின் ஒலிமாட்சியை யாராயும் தொழிலிற் புகுந்திருப்பதற்கிசையச் செட்டியாரவர்கள் எடுத்துபகரித்தபொருண்மாட்சியாராய்ச்சி ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறதென்றும், எழுத்துக்கள் ஆணவம் மலம் ஜீவன் என்னும் பெயராற் பகுக்கப் படுகின்றன வென்றும், இவை முறையே வல்லினம் மெல்லினம் இடையினமாமெனறும் செய்யுட்களில் இவ்வெழுத்துக்களின் தாரதம்மியக் கூடுறவினாலேயே அருளிலும் தாரதம்மியப் படுகின்றன வென்றும், ஜீவ எழுத்துக்கள மிகுதியுள்ள செய்யுட்களடங்கிய நூல்களே ஆகமலக்ஷணநூல் களென்றும, ஜீவஎழுத்துக்கள் பெரியபுராணத்தில் 100-க்கு 40 வீதமும் கம்பராமாயணத்தில் 100-க்கு 14 வீதமும் இருக்கின்றனவென்றும், ஆனால் கம்பராமாயணத்தின் நாகபாசப்படலத்தில் ஜீவஎழுத்துக்கள் 100-க்கு 60 வீதம் கலந்திருப்பதால், அதனுள் அருட்செய்யுளாகிய 26-ம் அருள்பெற்று விளங்கின வென்றும் தமது அருமையான ஆராய்ச்சியின் ஒருபகுதியிற் சிறிது பாகத்தை யாவர்க்கும் விளங்க எடுத்துரைத்தார்கள். இடையிடையே ஒரு பிராமணச் சிறுவன் ஹார்மோனியத்துடன் இன்னிசையாகப் பாடிச் சபையோரை மகிழ்விக்கஅன்றையசபை ஆனந்தகரமாகநிறைவேறியது.

மறுநாட்காலையில் தேவகோட்டை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களால் இனிமையான இசையுடன் தமிழ்மறையோதப்பெற்றுச் சபையாரம்பமாயிற்று. ஸ்ரீமான் மு. வெங்கடசாமி நாட்டார் அவர்கள் சபையார் வேண்டுகோட்படி அக்கிராசனத்தமர்ந்தார்கள். ஸ்ரீ ராம. கும. சு. சுப்பிரமணியஞ்செட்டியாரவர்களின் குமாரன் சிரஞ்சீவி குமரப்பசெட்டியாரால் வரதவிஞாபனம் வாசித்து அளிக்கப்பெற்றது. பிறகு சி வி. மாணவிகள் சொ. நாச்சியாள் என்பாளும் கா. சீதை என்பாளும் முறையே "கொல்லாமை" "காரைக்காலம்மை சரிதம்" என்னும் அரியபெரிய விஷயங்களை நல்லுரைகளாற் செவ்வனே சொல்லி யாவரையும மகிழ்வித்தார்கள். பின்னர் அக்கிராஸனாதிபதியவர்கள் எழுந்து இவ்விரண்டு விஷயங்கட்கும் தக்க முகவுரை கூறியபின் உபந்யசிக்கப் பெறும் விஷயம் "தமிழெழுத்துக்களின் ஒலிமாட்சி" யென்றும், உபந்யாசகர் தக்க ஆராய்ச்சியும் ஆங்கிலமுறையும் தமிழபிமானமும் உடைய நமது மாணிக்கநாயககரவர்களேயாவாரென்றும் உண்மையையெடுத்துரைத்து உபந்யாசகரை உபந்யசிக்கும்படி வேண்டினார்கள்.

பிறகு, ஸ்ரீமான் நாயக்கரவர்கள் எழுந்து சுவர சிருஷ்டியின்னை புழுமுதற் புமானவரையிலுள்ள ஜீவகோடிகள கருப்பையில் தங்கியிருக்கும போது ஓங்காரவளைவைப்பெற்றுக் கழுத்தமைந்த விடத்தில் 5 மடிப்புக்களை யும் பெற்றிருப்பதனாலேயே பிரணவத்துடன் கூடிய பஞ்சாட்சர வடிவுங்

டாகி அந்த 5 மடிப்புக்களில் முறையே ஒவ்வொன்று மறைந்து ஒவ்வொரு காமேந்திரியம் ஜனிப்பதால் ஈச் வாஸ்ருஷ்டியான ஜீவன் ஓங்கார உருவத்தை யடைகிறனென்றும், சர்வக்ஞத்வத்தை யடைந்த தக்ஷிணாமூர்த்தியினது சின்முத்திரையுடன் கூடியாஸனத்தமர்ந்த உருவம் ஓங்காரரூபத்தைக்காட்டுகிறதென்றும், இச்சஉரு. பண்டைக்கால வழக்கிற்பட்ட மெய்ப்புள்ளியைத் தலையிலுடைய ஒகரமேயென்றும், இதனைத் " தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்டு, எய்து மெகர ஒகர மெய்ப்புள்ளி " என்னும் சூத்திரம் வற்புறுத்துகிறதென்றும், இத்தப்புள்ளியுடன்கூடிய ஒகரத்தில் தக்ஷிணாமூர்த்தியின் தொங்கவிட்ட திருவடியின் ஸ்தானத்திற்கமைந்துள்ள கோட்டுருவப் பகுதியை எதிர்த்தலைப்புறமாகத் திருப்பினால் அது ஊர்த்துவ நோக்குடைய அகாரமாகிறதென்றும், இந்த அகாரத்தில் மேலும் கீழுமாக உகாரமகாரப் பகுதிகள் கூடாகிக் கிடப்பதால் ஓங்காரம் கெடாமல் மாத்திரை யுருவத்தைக்காட்டி நின்றதென்றும், பின்னரும் ஆஸனஸ்த தக்ஷிணாமூர்த்தியுருவ ஓங்காரத்துச்சிரசு சின்முத்திரை அபயஹஸ்தம் இவற்றின் ஸ்தானத்தில் அமைந்துள்ள மெய்ப்புள்ளி ஒகரவளைவின் இரண்டு முனையிலுமுள்ள புள்ளிவடிவகளாகிய மூன்றும் முப்புள்ளியான ஆய்தவெழுத்தென்றும், இச்செழுத்துப்புள்ளிகள் முறையே ஞானசக்தி இச்சாசக்தி க்ரியாசக்தியாகிய மூன்றருட்சக்திகளையும் காட்டும் முக்கண்களுருவமே யாமென்றும், இதை பேச்சினாலேயே அறியப்படுமென்றும், "ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி" என்னும் சூத்திரம் இதனைவற்புறுத்தி, இது தனக்கென ஒரு ஒலிபெறுது தனிக்குநின்ற மூச்சுக்காற்று நிலையென்றும், யோகசாஸ்த்ர விதிப்படி உதிணைச் சத்துள்ளார் மூச்சை அதிகம் செலவுசெய்யக் கட்டாதபடியாலேயே தமிழ் பேசு மூச்சிலே யக்ஷரமாகிய ஆய்தவெழுத்தொலியைப்பிற தொனிகளுடன் சமத்தச்சரிக்கவிட வில்லையென்றும், அதனாலேயே பாஷைகாடின்னியத்தையும் விரம உச்சாரணத்தையும் காட்டாமல் தமிழினியல்தோன்ற மென்மையாகவும் இனிமையாகவும் உச்சரிக்கப்படுகிற தென்றும், வல்லினவொலியுடன் பின்னும் முன்னுமாக முறையே ஆய்தவொலியை ஒரொரு முறை ஈரொரு முறையாகச்சேர்த்து உச்சரிப்பதனாலேயே ஆரியத்தின் வர்க்கங்களின் முன்னான் கெழுத்துக்களும் உச்சரிக்கப் படுகின்றனவென்றும், ஆய்தம் முன்னஞ்சேர்க்க சகரமும் ழகரமும் லகரமும் முறையே பீஜ ஷகரஸகரங்களாகிய ஆரியவொலிகள் உண்டாகிறனவென்றும், மெல்லொலி இடையொலிகளுடன் ஆய்தவொலி முன்னும்பின்னுமாகச்சேரும் முயற்சியால் இந்துஸ்தான் அரபி பாரஸிய பாஷையொலிகளும் ஆய்தவொலி முன்கூட்டிய பகரவொலியே இங்கிலீஷ் முதலிய பாஷையிலுள்ள F. A. என்னு மொலியென்றும் எனவே

தமிழ்ப்பாஷையின் பலவகை யொலிகளுடன் ஆய்தவொலியை முன்னும் பின்னும் கூட்டுவதற் பிற பாஷைகளிலுள்ள ஒலிகளெல்லாம் யாதொரு சிரமமின்றி உச்சரிக்கப்படுகின்றன வென்றும் இதனாலேயே தமிழ் ஒழிந்த பிற பாஷைக்காரர் ஆய்தவொலியை யதிகம் கூட்டுகிறார்களென்றும், அதற்குக் காரணம் குளிரின் ஆதிக்கமேயென்றும், குளிரேற்றத்தின் முறைப்படியே வழங்கப்படும் பாஷைகளும் முறைப்படியே ஆய்தவொலியை யதிகரித்துச் சரிக்கப்பெறுவதை யாராய்ந்தனரவாமென்றும், உலகில் ஜனது உருமாட்சி அருண்மாட்சி சொன்மாட்சி பொருண்மாட்சியுடன்கூடிய தமிழ்ப்பாஷை யொலிகளையும் தன்னுள் அடக்கியுள்ள ஒருபாஷையை ஆராய்ந்து தெளிவிக்கும் மேதாவி சொல்லப்புகுந்தாரானால் இத்தமிழ் எழுத்துக்களின் ஒலிகளையும் உருவங்களையுமல்லாத வொன்றை அமைக்க இயலார் என்று தாம் எண்ணுகிறதாகவும்கூறி உதாரணங்களாகக் கரும்பலகையில் எழுதித்தெரிவித்தும், ஆய்தவொலிகலந்த தமிழொலி அக்ஷரங்களாற் பலவேறு பாஷைப்பாட்டுக்களை யெழுதிக்காட்டியும், அவற்றை யுபந்யாஸம் கேட்கவந்தவர்களைக்கொண்டு படிப்பித்துக்காட்டியும் அமைதியுடன் உட்கார்ந்தார்கள். இந்த இரண்டுமணி நேரங்களும சபை யாதொரு பேச்சுமின்றி விம்மிதமடைந்து இருந்தது. பிறகு தலைவரெழுந்து பிரஸங்கியாரின் ஆராய்ச்சித்திறத்தையும் அவர்க்கிருந்த பிற பாஷை வல்லபத்தையும் உத்யோகத்துக்கேற்ற பெருந்தன்மை வினயமாதிய வற்றையும் எடுத்துவியந்து நூதன இனந்தெரியாத ஆராய்ச்சிமுறைக்கு ஏற்ற ஆக்கம் அகத்தே வாழுநாள் இவரறையதிகரித்துக்கொடுக்கும்படி எல்லாம்வல்ல இறைவனைவேண்டியும அமர்ந்தார்கள்.

பின்னர் வித்வான் மு கதிரேசச்செட்டியார் எழுந்து அவர்களது பிரஸங்கத்தில் தாங்கள் ஆழ்ந்துகிடந்த தன்மையையும், தாம் இடையிடையே கேட்டுவந்த கேள்விகட்கும் மனங்கோணாது முகங்கோட்டாது விரைந்து விடையளித்த பிரஸங்கியாரது மனத்தெளிவையும் ஆராய்ச்சித் திணிவையும் பற்றிப் பாக்க உபந்யாஸஞ்செய்து வீற்றிருந்தார்கள். மற்றும் பலர் புகழ்ந்தார்கள். கடவுள்வாழ்த்துடன் காலைச்சபை நிறைவேறியது.

மாலை 5½ மணிக்கு ஸபைகூடப்பெற்று, தேவகோட்டை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களால் தேவாரம் ஓதப்பெற்று ஸ்ரீமான் நாயக்கரவர்களது தலைமையின்கீழ்ப் பின்வரும் உபந்யாஸங்கள் நடைபெற்றன. முதலில் நாயக்கர் அவர்கள் எழுந்து, இச்சபையிற் பூரணமுயற்சி காட்டிவரும் ஸ்ரீமான் ராம. கு. ராம. ராமசாமிசெட்டியாருக்கு நேர்ந்துள்ளதையும் அவர் வரமுடியாதிருந்த

யைப்பற்றியும் விசனித்துப்பேசியமைக் கண்டனூர் ஸ்ரீ செ. அரு. சித. இராமநாதன்செட்டியாரவர்கள் எழுந்து, "அன்பு" என்னும் விஷயத்தை யெடுத்துக்கொண்டு, அதனைப் பாசஅன்பு பசுஅன்பு பதிஅன்பெனப் பாகுபாடுசெய்துகொண்டு ஒவ்வொருபகுதியினையும் உதாரணவாயிலாக நன்குவிளக்கித் தமது இயற்கையான குரலோட்டனும் அழைகநயுடனும் உபந்யசித்தமர்ந்தார்கள். பிறகு "பெண்கல்வி" என்னும் விஷயத்தினை சி. வி. மாணவிகள் சிவரத்தினமும் கு. மீனாட்சியும் உருக்கமும் உண்மையும் தோன்றும்படி பேசினார்கள். பிறகு "மூர்த்திநாயனார் சரித்திரம்," "மாணவர்கடமை" என்னும் விஷயங்களை முறையே சி. வி. மாணவர்கள் கு இலக்குமணன், மு. கருணையபாண்டியன் என்னும் இரண்டு சிறுவர்களும் அழகாக உபந்யசித்தார்கள. பின்னர்க் குன்றக்குடி ஸதாசிவப்பிரமம் என்பவர்கள் "சண்டேசுரர்சரித்திரத்" தைத் தமது ஆற்றலுக்கும் பக்திக்கும் ஏற்ப வெகு அழகாகவும் விரிவாகவும் எடுத்துச் சொல்லிச் சென்றார்கள்.

அநுஷ்டானத்துக்குப் பிறகு சொக்கலிங்கம்புத்தூர் மா. வி. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் எழுந்து "மெய்ப்பொருள் நாயனார் சரித்திரத்தைச்" சேக்கிழார்சுவாமிகளது செய்யுட்களிற் சிலவற்றை ஆதாரமாகக்கொண்டு இனிமையும் சுவையும் உட்பொருளும் தோன்ற அநுபவமுறையாயுபந்யசித்தார்கள். பிறகு காரைக்குடிக்கம்பராமாயணப்ரசாரகர் M. V. கோவிந்தராஜையங்காரவர்கள் கம்பராமாயணத்தில் "பாதுகா பட்டாபிஷேகத்தைச்" சுருக்கியுபந்யசித்தார்கள். பின்னர்த் திரிசிரபுரம் வித்வான் ஸ்ரீ மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள் "சேக்கிழாரும் செந்தமிழும்" என்னும் விஷயத்தைத் தமதுகல்வி ஆற்றலுக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ப எடுத்துச் சில சொற்களாற் பல விரிந்தபொருள்களை நயங்களுடன் பொருந்தக்காட்டிச் சுருங்கச்சொல்லி விளங்கவைத் தானந்தக்கடலில் ஆழ்த்தியேற்றினார்கள்.

பின்னர்ப் புலிசைஞானியார் மாணவர்கழகத்துக் காரியதரிசி ஸ்ரீ ம. ரா. குமாரசாமிப்பிள்ளையவர்கள் எழுந்து, "புண்ணியம்" என்னும் விஷயத்தை வியாஜமாக எடுத்துக்கொண்டு உடலின் நிலையின்மை, உயிரினேற்றம் ஆத்மதத்வம் ஈச்வரதத்வம் இவைகள் விளங்கும்படியும் தேவாலயத்திருப்பணிகளின் உயர்வும் அதனிற் பன்மடங்குயர்ந்த ஆத்[illegible]லயத் திருப்பணியாகிய இம்மாதிரியான கலாசாலைகளும் புத்தகசாலைகளும் சபைகளும் ஆகியஇவற்றின் அவசியமும் எடுத்துக்காட்டி, இவற்றைத் தேவாலயத்திருப்பணிகளுடன் ஒப்புக்கூட்டி விரித்துரைத்த அதிவேகமாகவும் மிகு கம்பீரமாகவும் பண்டிதர் வியக்கவும் பாமரர் பிரமிக்கவும் கலாசாலை முதலியவற்றில் வெறுப்புக்காட்டுவோர்க்கு

வெறுப்பைமூட்டியும் விருப்புடையார்க்கு உற்சாகத்தைக்கூட்டியும் 10½-மணிக்கே எழுந்துசெல்ல உத்தேசித்தவர்களையும் 12-மணிவரை நாழிகை தெரியாமலிருக்க உட்காரச்செய்தும் மிகவும் அழுத்தமாக இன்பக்குரலுடன் உபந்யாஸ மழை பொழிந்தார்கள்.

பிறகு தலைவரெழுந்து பண்டிதர் ஒவ்வொருவர்க்கும் பொழுது கொடுக்கக் கூடாதிருந்த குறையிருந்ததேனும் அருமைப் பிரஸங்கங்களாக இனிமையுடன் சொல்லப்பட்ட அவற்றின் நயங்களை ஸ்தாலீபுலாக நியாயப்படி எடுத்துக்காட்டி, பண்டிதர்களையும் சபையோர்களையும் பெரியோர்களையும் ஈசுவரனையும் வியந்தும் வாழ்த்தியும் வணங்கியும் போற்றியும் தமது இயற்கை விநயந்தோன்ற அமர்ந்தனர்.

பிறகு நகரத்தார்க்குப் பிரதிநிதியாக ஸ்ரீ குமாரவீரையரவர்கள் தலைவர்க்கும் பண்டிதர்கட்கும் வார்த்தாமாலையுடன் புஷ்பமாலைகளும் அணிவித்துச் சபையோர்க்கும் வணக்கம்கூறியும் நம்மாங்கில அரசர்க்கே இப்பெரியசண்டையில் ஜயமுண்டாகப் பிரார்த்தித்தும் ஈசுவரவணக்கம் கூறினார்கள். சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுச் சபை மங்களகரமாக நிறைவேறியது.

பிறகு நகரத்தார் மேளவாத்தியத்துடன் தலைவர்களை விடுதிக்கு அழைத்துச் சென்று மங்களகரமாகச் சேர்ப்பித்தார்கள்.

கண்டுகேளித்தோன்.

---

## மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின்
## எட்டாம்வருடபூர்த்திக்கொண்டாட்டம்.

இச்சன்மார்க்க சபையின் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் வழக்கப்படி சித்திரைமாதம் நடைபெறவேண்டியது சில சபையன்பர்களின் கருத்துப்படி இவ்வாவணிமாதம் உ௰உ௨ (7 9-17)ல் நடைபெற்றது. இவ்வருஷோத்ஸவத்திற்கு அக்கிராசனம் வகிக்க வருவதாகப் புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் ஸீனியர் லெக்சரர் ஸ்ரீ N. தியாகராஜையரவர்கள் M. A. L. T. முன்னரே யங்கீகரித்திருந்தனர். அங்கீகரித்திருந்தும் தாம்வருவதற்கு ஒருதடை நேர்ந்துவிட்டதாக ஆவணி௴ உ௰உ௨ தெரிவித்தார்கள். இங்ஙனம் ஸ்ரீ. தியாகராஜையரவர்கள் வரக்கூடாமையைச் சபையார் முதலுணர்ந்து வேறு செயக்கடவது ஒன்றுந்தோன்றாமையால் உபந்யாசம்செய்வதாக ஒப்புக்கொண்டபடி வந்திருந்த புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ டி. வி. ஸ்ரீநிவாசையங்காரவர்களை அக்கிராசனராக இருக்கவேண்டுமென்று விரும்பியபடி அவர்கள் தலைமையேற்றுச் சபையைச் சிறப்புறநடத்தினார்கள்.

முதலில் வலயபட்டி விநாயகவித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் இனிய இசையுடன் கடவுள்வாழ்த்தாகத் தேவாரதி அருட்பாக்களை ஓதினார்கள். அக்கிராசனாதிபதியவர்களுக்கு வந்தனோபசாரம் கூறியவுடன் காரியதரிசியால் எட்டாம் ஆண்டு அறிக்கைப்பத்திரம் படிக்கப் பட்டது. தலைவரவர்கள் முன்னுரையாகத் தமிழ்ப்பாஷையைப் பற்றிப் பேசிய வுடன் பிரமஸ்ரீ திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் பொறுமையென்னும் விஷயத்தைப்பற்றி நீண்டநேரம் உபந்நியாசம் செய்தார்கள். அதுசபையிலுள்ள வர்க்கு மிக்க சந்தோஷத்தை யுண்டாக்கியது. ஸ்ரீ மீனா செந்தமிழ்க்கலாசாலை மாணவருட் சிலர் கல்வி செய்ந்நன்றியறிதல் பெரியாரைத் துணைக்கோடல் முதலிய விஷயங்களைப்பற்றிச் சம்பாஷணை ரூபமாகவும் தனிமையாகவும் பிர சங்கம் செய்தார்கள். அவற்றைக்கேட்ட சபையோர்கள் அம்மாணவர்கள் பயின்ற முறையிற்றவறாது விஷயத்தை எடுத்துக்கூறிய வாக்கின் திறமை யைப்பற்றி வியந்தார்கள். பின்னர், புதுக்கோட்டையைச்சார்ந்த வெள்ளனூர் ஸ்ரீ வைத்தியநாதையரவர்கள் "வாரணமொப்பான மார்பும" என்னும் முதற் குறிப்புடைய கம்பராமாயணச் செய்யுளுக்குத் தாம்தெரிந்துகொண்ட விரிவுரை யைக் கூறினார்கள். அதன்பின்னர் நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய தனவை சியர்கள்வதிதரும் இளையாத்தங்குடி கல்லூரிகளும் மகமைகளும் வளர்ப்பதில் வந்தகத்துக்காரணபூதரும் கற்றார்க்கு நல்லெழுத்துடைய கற்பகமேபோல்பவருமாகிய மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீலஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் திருவாச கத்தில் "மாறாடி யினைவாலுமா காய்ச்சத்துதவிசிட்டு" என்னும் முதற்குறிப்பு டைய திருப்பாசுரத்தையெடுத்துக்கூறி அத்திருப்பாட்டினிரண்டாமடியிலுள்ள புத்த தான், கவந்தான், பிரிபான் என்னும் வினைச்சொற்களிலமைந்து கிடந்த நுண் பொருள்களை ஸ்ரீ மணிவாசகப்பெருமான் பிறஇடத்து திருவாய்மலர்ந்தரு ளிய திருப்பாசுரங்களின் கருத்துக்களோடொப்பிட்டுக்காட்டி யாவரும் கழிபேரு வகைக் கடலுளாழ்ந்தின்புறும்வண்ணம் செய்தார்கள். பின்னர் அக்கிராசனாதி பதியவர்கள் தமிழரின் பூர்வீக நாகரிகம் என்ற விஷயத்தைப் பற்றிப் பேசி நடந்த உபந்நியாசங்களைப்பற்றிய அபிப்பிராயங்களையும் கூறினார்கள். சபையாரால் வந்தனம் கூறப்பெற்றது. அக்கிராசனாதிபதியவர்கள் உபந்நியாசகர் முதலி யோர்க்கு ஆசனந்தனதாமபூலாதிகள் வழங்கப் பெற்றன. இப்பொழுது நடை பெறும் ஐரோப்பிய மகாயுத்தத்தில் மாட்சிமைதங்கிய ஐந்தாம்ஜார்ஜ் சக்கர வர்த்திக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று கடவுட்பிரார்த்தனை செய்யப் பட்டது. புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களுக்குவாழ்த் துக்கூறி அவர்கள் உருவப்படத்திற்குப் பூமாலை சாத்தப் பெற்றது. இரவு ஒன்பது மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் சபைநிறைவேறியது.

கண்டுகேளித்தோன்.